

# சிறையிலிருந்து

# சிங்கள சகோதரனுக்கு...

விவேகானந்தனூர் சதீஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலிருந்து
# சிங்கள சகோதரனுக்கு ...

**விவேகானந்தனூர் சதீஸ்**

Dip in Journalism & Human Rights

**வெளியீடு**

**காவியாலயா வெளியீட்டகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யுள் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு... (கவிதைத் தொகுதி) |
| ஆக்கியோன் | : | திரு.செ.சதீஸ்குமார் (விவேகானந்தனூர் சதீஸ்) Dip in Journalism & Human Rights |
| முதற்பதிப்பு | : | 2017 புரட்டாதி |
| பதிப்புரிமை | : | திருமதி.செ. மகேஸ்வரி "காவியாலயா" இல. 177, விவேகானந்தநகர் கிழக்கு, கிளிநொச்சி. *poetsathiesh@gmaili.com* |
| வெளியீடு | : | காவியாலயா வெளியீட்டகம் |
| அட்டைப்படம் | : | திரு. கோபிதன் (D'Signarts) |
| அச்சுப்பதிப்பு | : | தேவி Printers, Jaffna. 021 300 3030 |

**Name of the Book: Siraiyilirunthu Singala Sakootharanukku...,**

**Author: Vivekananthanoor Sathiesh, First Eddition: 2017 September,**

**Copy Right: © Mrs S.Maheswari -** *" Kaaviyalaya" No 177, Vivekanandanagar East, Kilonochchi,* **Cover Design : Mr.Koopithan.** *(D'Signarts)*

**Publication: Kaaviyalaya veliyeddakam,**

**Printing : Devi Printers** *Jaffna.*

*ISBN978-955-38482-1-5* *Price : Rs 300/=*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தீவில் வாழ்கின்ற

இனங்களுக்கு இடையிலான

நல்லிணக்கத்திற்கும்

சமாதானத்திற்கும்

சகவாழ்விற்கும்

சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

"சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு" என்னும் தலைப்பிலான விவேகானந்தனூர் சதீஸ் அவர்களின் நான்காவது கவிதைத் தொகுதி இது.

ஏற்கனவே "இரும்புக் கதவுக்குள் இருந்து", "விடியலைத் தேடும் இரவுகள்", "மனச்சிறையிலிருந்து..." என்னும் மூன்று தொகுப்புக்களை அவர் வெளியீடு செய்துள்ளார். அரசியற் கைதியாக சிறையிருக்கும் சதீஸ் போன்றவர்களின் மன உணர்வுகள், அவர்களின் வலிகள் என்பன சாதாரண மக்களின் கற்பனைக்கு அப்பாற்பட்டவை.

நாளும் பொழுதும் ஒவ்வொரு நொடியும் அவர்கள் அனுபவித்து வெந்து தவிக்கும் அந்தச் சூழலின் கொடுமைக்குள் இருந்து கொண்டு கவிதை எழுதுவதென்பது எத்துணை பெறுமதியானது என்பதை நாம் உணர்ந்து கொள்வோமாக.

தனிப்பட்ட வாழ்வில் தனிமனித சுதந்திரம், அப்பா அம்மா, மனைவி பிள்ளைகள், ஏனைய உறவுகள் எல்லோரையும் பிரிந்து அவர்களின் மூலம் கிடைக்கும் தூய்மையான இன்ப துன்பங்களை இழந்து, வருடத்தில் சில தடவை சந்திக்கும் சந்திப்புக்களை காத்திருந்து காத்திருந்து மனம் புழுகலில் சாகும். அக் கொடுமையான பின்னணியில் கவிதை எழுதுவது என்பது எத்துணை வில்லங்கமானது? ஆனால், சதீஸ் அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதித்துள்ளார். இவர்களின் நீண்ட அரசியல் வரலாற்றில் தமிழ் மக்கள், குறிப்பாக பொது வெளியில் அரசியல் ஈடுபாடு காட்டி தமிழ் உணர்வோடு தலைநிமிர்ந்த அரசியல் தலைவர்கள், பொது அமைப்புக்களின் உறுப்பினர்கள், இயக்க உறுப்பினர்கள் என சந்தேகிக்கப்பட்டவர்கள் கைது செய்யப் பட்ட பின்னர் அனுபவித்த கொடுமைகள் கொழும்பில் உள்ள புலனாய் வுத்துறையின் "நாலாம் மாடியில்" ஆரம்பமாகின்றது. இந்த நாலாம் மாடி சித்திரவதை பற்றி வெளிவரும் பத்திரி கைச்செய்திகளும், செவி வழிக்கதைகளும் பிரசித்தமானவை.

அதன் தொடர்பினால் கைது செய்யப்பட்டவர்கள் சந்தித்த துன்பங்கள் இரத்தக் கண்ணீரை வருவிப்பவை. அதை விட அந்த வன்கொடுமைகளில் இருந்து உயிர் தப்பிப் பிழைத் தவர்களும் இப்போது வரை சிறைகளில் இருந்து துயரப்பட்டுக் கொண்டு இருப்பது எங்கள் இனத்தின் வழிவழி முதுசமாக உள்ளது.

தமிழர் தம் பிரதேசத்தின் பல பகுதிகளில் இருந்தும் இவ் வாறு பல்வேறு தரப்பட்டோர் சிறைத்தடுப்புக்களுக்கு பின் னால் இருந்து வதங்கிக்கொண்டு உள்ளனர். தகப்பனாக, மகனாக, சகோதரனாக, கணவனாக பல்வேறு உறவு நிலை களில் இவர்கள் உள்ளனர்.

விவேகானந்தனூர் சதீசும் இவ்வாறு பலரின் துயர நினைப்புக்களுடன் தான் சிறையில் உள்ளார். அவர்களின் அம்மா, மனைவி, மகள், ஏனைய உறவுகளின் சோகம் சொல்லி மாளாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனினும் இவற்றினை சதிஸ் எதிர்கொள்வது தான் அவரிடம் உள்ள தனித்துவமான பண்பாக அமைந்துள்ளது. நீண்ட சிறை வாழ்க்கை கற்றுத்தந்த பாடங்கள், அவற்றினை அனுபவித்து, அனுபவித்து இறுகித் திடமாக்கி அவர் பெற்றுக் கொண்ட உணர்வுகள் அவரை புடம்போட வைத்துள்ளன. சுடச்சுட ஒளிரும் பொன்னாக இவை அவரை மாற்றியுள்ளன. தன் மன அம்சங்களை அவர் கவிதை மீது ஏற்றி விட்டதால் அவர் தம் கவிதைகள் தனித்துவமான கவிதைகளாகின்றன.

"ஆயுள் தண்டனையளிக்கப்பட்ட அரசியல் கைதியாக சதா அதையே எண்ணி எண்ணி சிதைத்துக் கொள்ளாது, என்னை நானே ஆற்றுப்படுத்த ஆரம்பித்ததன் விளைவுதான் இவை" என சதீஸ் தன் ஆக்க முயற்சி பற்றிக் கூறுகின்றார்.

உண்மையில் இதற்குரிய மனோவலிமையை எல்லோராலும் பெற்றுக்கொள்ள முடியாது. எனினும் சதீஸ் அதனைப் பெற்றுள்ளார். அத்தகைய மனோ வலிமையின் பின்னணியிலேயே

"...............

சிறைக்குள்ளிருந்து நான் எழுதிய
எழுத்துக்களையாவது
சிறை வைக்காது விடுவித்து விடு - அவை
சிறகடித்துப் பறந்து
சிலரை யேனும் சிந்திக்கத் தூண்டலாம்.

................................"

என "இறுதி மடல்" என்னும் தலைப்பிலான கவிதையில் சதீஸ் குறிப்பிடுகின்றார். அதை விட பெறு மதியானது தங்கள் விடுதலை தொடர்பில் அக்கறையற்று இருக்கும் அரசியல் தலைமைகள் பற்றி வெளிப்படுத்தப்படும் சலிப்பு முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"......................

நம்பிக்கையுடன்

நீள் துயில் கொள்கின்றேன்

நாளை என் இறுதி ஊர்வலத்தில்

நாமறியாத புல அரசியல் பிரபலங்கள்

நடைபவனி வருவார்கள் என

............................"

சிறையும் அதன் கட்டமைப்புக்களின் பின்னால் உருவாக்கப்பட்ட கடும் சட்டதிட்ட நடவடிக்கைகளை அனுபவித்தும் அதிர்ந்து போகாமல் தன் கவிதை ஆக்க முயற்சிக்காக அவர் மேற்கொண்ட செயற்பாடுகள் ஏராளம். "பெரிய அளவில் எனக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. அதனால் படிக்க முடியவில்லை. ஆனாலும், இலக்கிய சுவைஞர்களிடம் கெஞ்சிக் கேட்டு பதிவுத் தபாலிலும், என்னைப் பார்க்க வரும் அம்மாவின் மூலமாகவும் அவ்வப்போது சில நூல்கள் கிடைத்தன" என்பதிலிருந்து அவரது முயற்சியை புரிந்து கொள்ள முடியும்

"..................................

என்னுள் அச்சம் தொற்றிக் கொள்கிறது

எண்ணங்களை எழுத்தில் வடித்தால்

என் நிலை என்னாவது ?

கொப்பித் தாளில் குமிழ் முனை மோதும் நொடிகள்

மௌனமாய் மனது பின்னடிக்கிறது

..........................."

என்று கவிதை எழுதத் தொடங்கு முன்னர் அவர் சலித்துக் கொள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைகள் எழுதும் கவிஞர்களின் உணர்திறன் ஒவ்வொரு விதமானது. அவர்களின் அனுபவம், அறிவு, ஆற்றல், சூழல்தொடர்புகள், காணும் அந்தக் காட்சிகள், புலக் காட்சிகள் என்பன எல்லாம் அவர்களின் கவியாற்றலை செழுமைப்படுத்தி நுண்திறன் மிக்க கவிஞர்களாகின்றது.

இன்னும் பல கவிஞர்கள் தம் கவிதைகளை நுணுக்கமாக செதுக்கி எடுத்து அதிசயிக்கத்தக்க சிறப்பம்சங்களாக்க பல்வேறு முயற்சிகளை எடுப்பர்.

இயற்கையான பிரதேசங்கள், அழகும் அமைதியும் பொங்கிவழியும் கடற்கரை, ஆற்றோரங்கள் என இன்னும் வெவ்வேறு இடங்களுக்கு பயணித்தோ வெவ்வேறு இடங்களில் தேடியோ கவிச்சித்திரங்களை வரைந்து தள்ளிவிடுகின்றார்கள். இத்தகு புறச்சூழலில் சுற்றுமதில் சுவர்களையும், கறள் படிந்த கம்பிகளையும், காரிருளையும், வெறுப்பை உமிழும் சிறைக் காவலர்களையும், துயர துன்ப நினைவுகளையும் கொண்ட சதீஸ் போன்ற கவிஞர்களின் கவிதைகளை எவை செழுமைப் படுத்தும்? ஆனால் உண்மை ஒளியும், வேதனையின் ஆழமும் கொண்ட இவர்களது கவிதைகளை பிற கவிதைகளோடு ஒப்பிட முடியாது என்பதே உண்மையானதாகும்.

வானத்தில் எத்தனையோ விதமான பறவைகள் பறக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். அழகு வர்ணங்கள், உருவங்கள், அமைப்பு என எல்லாமே வித்தியாசமானவை. அவ்வாறே அவை பறக்கும் விதமும், பறக்கும் வேகமும் வெவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறானவை. ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக எங்கள் மனங்களை ஈர்த்துக் கொள்கின்றன. இத்தகைய வேறுபாடு களை வைத்துக்கொண்டு நாங்கள் யாரும் கலந்த பறவைகள் இல்லை என்று சொல்வதில்லை.

சாதாரண அழகுடன் மிக மெதுவாக பறக்கும் பறவையாக இருந்தால் என்ன? மிக்க அலங்காரமான தோற்றத்துடன் துல்லி யமான வேகத்துடன் பறக்கும் பறவையாக இருந்தால் என்ன? எல்லாமே பறவைகள் தான்.

இந்தப் பொது விதியின் பின்னணியிலே தான் சதீஸ் போன்ற கவிஞர்களை ஏனைய கவிஞர்களோடு ஒப்பிட முடியும். அதன் மூலம் மெச்சிக் கொள்ளவும் முடியும்.

"......................................
அன்று முதல் இன்றுவரை
ஆண்ட அரசுகள்
பிரச்சினையை தீர்க்காத தால்
யுத்தம் தின்று தீர்த்தது மக்களை
அரசியல்த் தலைமைகள்
மென்று விழுங்கினர்
அமைதிப் பேச்சுக்களை...
......................................"

என்று குற்றம் காட்டும் கவிஞர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"...................................

அரசியல் கைதியின் விடுதலை
இனவாதப் பூட்டுக்களால்
இறுக்கப்பட்டுக் கிடக்கிறது
உடைக்க வரும்
உண்மை மனிதாபிமானி யார்?
..............................."

எனவும் கேட்கின்றார் சதீஸ்.

சிறையில் படும் கொடுமையினை அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"...........................................

சோற்றுக் கோப்பையுடன்
வாட்டும் வெய்யிலில் வரிசை.....
சாகாமல் இருக்க
சாட்டுக்குச் செய்த சமையல்.....
தட்டுக்குள் அளவாக அளந்தபின்
தடியெடுத்துத் துரத்துவர்
பசிக்குதென்று பாதிக் கரண்டி கேட்டால்,
"புசிக்கவா சிறைக்கு வந்தாய்
புலி என்று பொய் சொல்லி .....? "
புண்பட்ட மனதோடு
புகுந்திடுவர் செல்லுக்குள்
............................"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம் செய்த கோலம் சதீஸை அரசியல் கைதியாக்கியது. அந்தக் கொடும் பின்னணியை என்ன வென்று சொல்வது?.

"...............................
வல்லதொரு பள்ளியிலே
வளமாக நான் படித்தேன்
கள்ளமில்லா வளர்ப்பிருந்தும்
காலமாற்றம் வென்றதுவே
சொல்லவொணாத் துயரோடு
சிறையிருக்கும் நிலையாச்சு
அல்லும் பகலும் வருந்துகின்றேன்
ஆயுள்கைதி மகனம்மா
..................................."

இத்தகைய ஒரு நிலை யாருக்கும் வரக் கூடாது. இதன் பின்னால் இருக்கும் நெஞ்சைப் பிராண்டும் வேதனைகள் எத்தகைய துயரமானது?

"............................
என்னவரே !
சிறை மீண்டு எப்போது வருவீர்கள்
எனக் காத்திருக்கின்றேன்
எம்மை மறந்து
இளமை கலந்து
இருவரும் இணைந்து
இல்லறம் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருயிர் படைப்போம்
ஒற்றை மகளுக்கு
பக்கத் துணையாக
.................................."

கணவன், மனைவிக்கு இடையிலான இனிய உறவின் பிரிவுத்துயரை இக்கவிதை வெளிப்படுத்துவதோடு மனத்தின் ஏக்கத்தையும் வெளிப்படுத்துகின்றது.

பொதுவாக தண்டனை பெறுபவர் ஒருவராக இருப்பினும் அந்தத்தண்டனையில் துயரை அனுபவிப்பவர்கள் தத்தமது உறவு நிலைகளின் பின்னணியில் பல்வேறு உறவு நிலைகளே. அம்மாவின் துயரம், மனைவியின் வேதனை, பிள்ளையின் வேட்கை எல்லாமே விபரிக்க முடியாதவை எம்மால் விளங்கிக் கொள்ளப்பட வேண்டியவை.

சிறையில் தனித்துவமான கொடுமைகளில் ஒன்றை கவிஞர் இப்வாறு வெளிப்படுத்துகின்றார்.

"........................................................
கள்ளத்தனமாய் கடிதம் எழுதி
காவலரிடம் கொடுத்து விட்டேன்
கவலையோடு காத்திருக்கும் அன்னைக்கு .
கடிதம் பார்த்து
கண்ணீர் சொரிந்திருப்பாளா?
கவலை மறந்திருப்பாளா?
கற்பனையில் மூழ்கியிருந்தேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைவேளை கழிவு வாய்க்காலில்
கடிதம் மிதந்து செல்கிறது.
..................................................................”

தொடர்ச்சியான சித்திரவதை, நீண்ட சிறையிருப்பு இத்தனையையும் தாண்டி, சதீஸ் என்ற அரசியல் கைதி வேண்டுவது எதை?

“..................................................................
கம்பிகள் சூழ்ந்த கருக்கல் அறைக்குள்
கருணை நாடும் கைதியாய்
ஒவ்வொரு காலைப் பொழுதிலும்
ஒய்வின்றித் தேடுகிறேன் ....
ஒளியிழந்த கண்களில்
விழிநீர் மட்டும் வழிகிறது
விடியலைக் காணவில்லை.
..................................................................”

“சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு” என்னும் தலைப்பிலான இத்தொகுப்பில் சிங்கள சகோதரனுக்கு என விதைக்கப்பட்ட கவிதைகள் மிகச்சிலவே.

அவற்றில் “பெரும்பான்மை தோழா” என்ற கவிதை முக்கியத்துவம் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"..........................................................

நாம் செய்த தவறு தான் என்ன
பிறந்த மண்ணில் நிமிர்ந்து நின்றதா?
பரம்பரை நிலத்தில் படுத்துப் புரண்டதா?
பாட்டன் பூமியில் பண்புடன் வாழ்ந்ததா?

"தமிழனாய்ப் பிறந்தது குற்றமா?
தன்மானத்துடன் வாழ்வது குற்றமா?
தனித்துவ கலாசாரம்தான் குற்றமா?
.........................................................."

என சதீஸ் கேட்பது அவருக்காக மாத்திரமல்ல இந்த நாட்டில் தமது பூர்வீக நிலங்களில் வாழும் ஆதிக் குடிகளான தமிழ் மக்கள் சார்பாகவும் தான். மொத்தத்தில் இந்தக் கவிதைத் தொகுப்பினை பூரணமாகப்படித்து முடிக்கையில் புலப்படும் உண்மையாதெனில், சதீஸ் தனியே தனது மனக்கவலைகளை மாத்திரம் கவிதையாக்கவில்லை.

அரசியல் கைதியாக இந்தக் கணம் வரை அவர் எத்தகைய கொடுமைகளை அனுபவித்தாலும் தன் வேதனைகளுக்கு அப் பால் தான் சார்ந்த இனம், தனது மக்கள், அவர்களது மொத்த அபிலாசைகள் என எல்லாவற்றையுமே தன் கவிப் பொருளாக் கியுள்ளார்.

தமிழ் மக்கள் தம் சொந்த நிலத்தில் சகல அரசியல் உரி மைகளுடன் தலை நிமிர்ந்து வாழ வேண்டும் என்பதில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கறை உள்ளவராக உள்ளார். இந்த எண்ணமும் செயற்பாடும் அவரை மேலும் ஒரு உன்னத மனிதனாகக் காட்டுகிறது.

"..........................................................

சிறைக்குள் இருந்து நான் எழுதிய

எழுத்துக்களை யாவது

சிறை வைக்காது விடுவித்து விடு - அவை

சிறகடித்துப் பறந்து

சிலரையேனும் சிந்திக்கத் தூண்டலாம்.

.........................................................."

என்ற அவரது வேண்டுகோள் சுமுக சூழ்நிலைகளால் இப்போது நூலாக உங்கள் கைகளுக்கு வந்துள்ளது.

விவேகானந்தனூர் சதீஸ் என்னும் இந்தக்கவிஞர் மிக விரைவில் சுதந்திர மனிதனாக சிறை மீண்டுவர வேண்டிக் கொள்வோமாக.

நன்றி

**இணுவையூர்**
**சிதம்பரத்திருச்செந்திநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகோதரர்களுக்கு...

சிறைக்குள் இருந்தவாறு சிங்கள சகோதரர்களுக்கு எதைச் சொல்லலாம்....? உறக்கம் கலைந்த ஒரு விடிகாலைப் பொழுதில் அர்த்தம் பொதிந்த கேள்வி ஒன்றை மனது என்னிடம் கேட்டது. அத்தகவல் விர்ர்ர்... என்று மூளைக்குச் செல்ல, அங்கிருந்து முளைத்த வரிகளை முழு நிர்வாணமாய் தந்துள்ளேன். என் வாழ்க்கைத் தரிசனத்தில் ஒரு சிறு பகுதியாக "சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு - எனும் இக் கவிதைத் தொகுதியை கருதலாம். என்னுடைய எழுத்துக்களை புசித்துவிட்டு பொன்னாடை போர்த்துவார்கள் என்றோ பூசனங்கள் சூட்டுவார்கள் என்றோ கனவிலும் நினைக்கவில்லை. காரணம், இவை வைரமுத்துக்களின் வாசமற்ற வெறும் வலிசுமந்த வார்த்தைகளால் கோர்க்கப்பட்ட கிறுக்கல்கள். கழிவுத் தாளில் கடித உறை செய்து சோற்றுப் பருக்கையில் ஒட்டி, களவாக அனுப்பிய ஆக்கங்களை ஒருசில பத்திரிகை பிரசுரிக்காது விட்டபோது அதனை நானே உணர்ந்து கொண்டேன். பெரிதளவில் எனக்குப் புத்தகங்கள் கிடைக்கவில்லை. அதனால் படிக்க முடியவில்லை. ஆனாலும், இலக்கிய சுவைஞர்களிடம் கெஞ்சிக் கேட்டு பதிவுத் தபாலிலும் என்னைப் பார்க்க வரும் அம்மாவின் மூலமும் அவ்வப்போது சில புத்தகங்கள் கிடைத்தன. அவர்களுக்கு நன்றி. மூத்த, இளைய இலக்கியவாதிகள் பலருக்கு புத்தகங்கள் அனுப்ப விருப்பமிருந்தும் நான் சிக்கியுள்ள 'பயங்கரவாத தடைச்சட்ட' விதியின் காரணத்தால் விலகிச் செல்கிறார்கள். இதில் வேடிக்கை இல்லையென்றே தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத் தொகுப்பிலே அடக்கப்பட்டுள்ள அறுபத்து சொச்ச கவிதைகளும் அனைவருக்கும் பிடிக்கும் என்று சொல்லவில்லை. நிச்சயம் சில குற்றம் குறைகள் இருக்கும். ஏனெனில், எனக்கு ஒசை, நயம், பாவம், சொல்லித்தர நானிருந்த சிறையறையில் யாரும் இருக்கவில்லை. ஆயுள் தண்டனையளிக்கப்பட்ட அரசியல் கைதியாக சதா அதனையே எண்ணி என்னை சிதைத்துக் கொள்ளாது, என்னை நானே ஆற்றுப்படுத்த ஆரம்பித்ததின் விளைவு தான் எனது அனுபவ இலக்கியம். தெரிந்தும் தெரியாமலும் பத்திரிகைகளுக்கு அனுப்பிய படைப்புக்களில் சில எனது முன்னொட்டுப் பெயருடன் ஊர் முகவரியிட்டு வந்த போது குழந்தையாக மாறி குதூகலமடைந்தேன். அது என்னை கவிதை எனும் படலை தாண்டி கட்டுரை, சிறுகதை, விமர்சனம் என கட்டின்றி திரியவைத்துள்ளது. நூலுக்கான கவிதைகளை எழுதி முடிக்கும் தருவாயில் சிறைக்குள்ளிருக்கும் சிங்களப் பெடியன் சொன்னான், 'இந்தப் புத்தகத்தை சிங்கள மொழியில் வெளியிட்டால் தான் நல்லது' என்று. அதற்கு செயல் வடிவம் கொடுக்கும் உடனடித் துணிவு என்னிடம் இல்லையென்பதால் தாய்மொழியில் பரீட்சித்துப் பார்க்க விளைகிறேன்.

இறுதியாக, எனது எழுத்துக்களை 'நல்லாயிருக்கு...நீங்கள் எழுதுங்கள்...' என ஆரம்பத்திலிருந்தே ஊக்கமளித்து வரும் குடும்பத்தினர், இலக்கியப் பிரியர்கள், எனது ஆக்கங்களை சமூக ஏக்கங்களாக ஏற்று பிரசுரித்து வரும் உதயன், தினகரன், வலம்புரி, சுடர் ஒளி, தினக்குரல் பத்திரிகைகளுக்கும், இலக்கிய, ஊடக நண்பர்களுக்கும் சக பாடிகளான சக தமிழ் அரசியல் கைதிகளுக்கும் நன்றியின் சொற்கள் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும், எனதிந்த நான்காவது படைப்பிற்கான எண்ணக்கரு வளர்ந்து நூலாகப் பிரசவம் பெற அனுசரணை வழங்கிய" கைகொடுக்கும் உறவுகள்" அமைப்பினருக்கும், நூல் கனதி பெற அணிந்துரை, வாழ்த்துரை, அட்டைப் படத்தினை வரைந்து கரம் அசைத்த கலைபயில் தெளிவுடை உள்ளங்களுக்கும் என் சிரம் தாழ்த்திய நன்றிகள். மேலும் தொழில் நிலைக் கப்பால் தொண்டாற்றி சமூகப்பொறுப்புடன் புத்தகத்தை அச்சிட்டு அழகுறத்தந்த தேவி Printers நிறுவனத்திற்கும் நன்றிகள் கூறக் கடமைப்படுகிறேன். எனது அனுபவப் பகிர்வினை இழுத்து வைத்து வாசிப்பதும் தூசிப்பதும் வாசக நெஞ்சங்களாகிய தங்களின் பார்வைக் கோணத்திலே தான் தங்கியுள்ளது. உங்களது எத் தகைய விமர்சனங்களையும் சொந்தமாக்கி மேலும் செப்பமாக எழுத சந்தர்ப்பம் நாடுகிறேன்.

அன்புடன்
விவேகானந்தனூர் சதீஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலுக்குள் .....


| | | |
|---|---|---|
| 1. | அன்னையின் அடி தொழுது | 1 |
| 2. | அங்கலாய்ப்பு | 2 |
| 3. | கருக்களில் அழுகின்ற கவிதைகள் | 3 |
| 4. | நாமும் இலங்கையரே | 4 |
| 5. | தீர்வு | 5 |
| 6. | நீதிக்கான நிலைமாறு காலம் | 6 |
| 7. | கைதியின் கனவு | 8 |
| 8. | மீள்குடியேறிய போது... | 9 |
| 9. | அறுவடை | 11 |
| 10. | இருப்பு | 12 |
| 11. | துரதிஷ்டம் | 13 |
| 12. | ஸ்ரீ லங்கா மாதா | 14 |
| 13. | சாய்ந்த பொழுதுகளில் | 15 |
| 14. | ஒன்றே குலம் | 17 |
| 15. | பரதேசி | 18 |
| 16. | புண்பட்ட மனசோடு | 19 |
| 17. | வி(ச)தி | 20 |
| 18. | வரலாற்றழிப்பு | 21 |
| 19. | நானும் நீயும் | 22 |
| 20. | அம்மாவின் புளிச்சாதம் | 23 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21. | ஜாலம் | 24 |
| 22. | வலியின் வலிகள் | 25 |
| 23. | சத்தான வாழும் காலம் செத்துத்தான் போகிறதா? | 26 |
| 24. | நம்பிக்கை | 28 |
| 25. | உங்களுக்கும் தானாம் | 29 |
| 26. | அமைதி | 30 |
| 27. | விடுதலையின் விலை | 31 |
| 28. | சிறுமடல் | 32 |
| 29. | அவருக்காக... | 38 |
| 30. | போர் | 39 |
| 31. | அழியும் கனவு வாழ்வு | 41 |
| 32. | தமிழனுக்காக | 42 |
| 33. | இருள் வாழ்க்கை | 43 |
| 34. | பிறிசின் பேசண்ட் | 45 |
| 35. | எங்கள் தேசம் | 47 |
| 36. | நேரம் | 48 |
| 37. | ??? | 49 |
| 38. | கருணையற்றவர் | 51 |
| 39. | சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு | 52 |
| 40. | நல்லிணக்கம் | 56 |
| 41. | சன்மானம் | 57 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 42. | நக்கல் பிரதிநிதி ? | 58 |
| 43. | தமிழனின் தலைவிதியா? | 59 |
| 44. | ம(மி)த வாதம் | 60 |
| 45. | வதைக்கூடம் | 61 |
| 46. | சிறைக் குருவியின் கேவல் | 62 |
| 47. | கனவு - நினைவு | 63 |
| 48. | சரீர விடுதலைக்காக... | 64 |
| 49. | தடுப்புக் கைதிகள் | 65 |
| 50. | அவதானம் மாந்தரே அவதானம் | 66 |
| 51. | ஆதங்கம் | 67 |
| 52. | தந்தையின் ஏக்கம் | 69 |
| 53. | பெரும்பான்மைத் தோழா | 71 |
| 54. | இதுவுமொரு இனவழிப்பே | 74 |
| 55. | அப்பாவுக்காக... | 75 |
| 56. | பத்திரிகைக்காக... | 76 |
| 57. | அடையாள அட்டை | 77 |
| 58. | வஞ்சிக்காதீர் | 78 |
| 59. | பொழுது புலருமென்று... | 79 |
| 60. | இறுதி மடல் | 81 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் அடி தொழுது

என்னை நல்வழி நடத்தும் மகேஸ்வரியே
வன்னிப்புகழ் கிளிநொச்சிக் கந்தன் துணையே
செந்தமிழ் புகட்டி சீர்பதமீர்ந்து - எனை
செப்பமாய் வளர்த்த செஞ் சுடரே

தாய்ப்பாலுடன் தமிழ் உணர்வு ஊட்டி
தலைமைப் பண்புடன் தரணி போற்றிட
உதிரம் சுரந்து உரமாய் நிற்கும்
உண்மைத் தெய்வம் நீயே தாயே

அன்புத் தமிழில் தேன் கலந்து
அமிழ்தின் இனிய பா வடிக்க
அகர முதல் எழுத்தறிவித்து
உகரமாய் நிற்கும் உயிரே வாழ்க

என்னிடர் அகற்றிட உதித்த தாயே
உன் சொல்லே என்றும் என்னுலகம்
கடுந்துன்பம் வந்த போதெல்லாம்
கடவுளாய் நான்தொழுத காரிகையே

சங்கடங்கள் பல சூழ்ந்து சதிராடிய போது
சக்தியாய் சிவனாய் சகலதுமாய்
புத்திகள் புகட்டி புதுமையாய் பேணி
பத்திரமாய் காத்த பவளவள்ளி தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமாறிச் செல்லாது தூய்மையாய் வளர்த்து
தீமைகள் நெருங்காது தீவிரமாய்க் காத்து
துன்பங்களை எல்லாம் துவம்சம் செய்து
தூக்கம் விழித்து துணை புரிந்தாயே

# அங்கலாய்ப்பு

என்னவரே !
சிறை மீண்டு எப்போ வருவீர்கள்
எனக் காத்திருக்கிறேன்...

எம்மை மறந்து
இனிமை கலந்து
இருவரும் இணைந்து
இல்லறம் புகுந்து...

ஒருயிர் படைப்போம்
ஒற்றை மகளுக்கு
பக்கத் துணையாக...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருக்களில் அழுகின்ற கவிதைகள்

கரு தேடுகின்றேன் கவி வரைய
வலியில்லாமல் ....
வருத்தமில்லாமல் ....
குருதியில்லாமல் ....
குழப்பமில்லாமல் ....

கலகலப்பான கருக்கள்
இற்றைகளில் இல்லை
இருப்பதெல்லாம் ஏதோ
ஏக்கங்களும் எதிலி வாழ்க்கைகளும்
இழப்புக்களும் இறப்புக்களும் மட்டுமே

ஓடியலைந்து ஒரு கருவை
தேடியெடுத்துத் தொடுத்தேன் சில வரிகள்...
எங்கள் நிலையுமெண்ணி
எமக்காயும் வரையுங்கள் என
எத்தனையோ கருக்கள்
பிறக்கின்றன கிளையாக

என்னுள் அச்சம் தொற்றிக் கொள்கிறது
எண்ணங்களை எழுத்தில் வரித்தால்
என் நிலை என்னாவது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பித் தாளில் குமிழ்முனை மோதும் நொடிகள்
மௌனமாய் மனது பின்னடிக்கிறது

பிறப்பெடுக்கும் கருப்பொருள் எல்லாம்
கதையாக்கிட விருப்பிருக்கிறது
ஆனாலும் நான் பிறந்திருப்பது
தமிழர் வாழ்வே வினாவாக்கப்பட்டிருக்கும்
ஒரு தேசத்தில்!

## நாமும் இலங்கையரே

தமிழனென்று சொல்லி
தனித்துவமாய் வாழ்கிறோம்
பரம்பரை வழியில் வந்த
ஈழப் பிரஜைகள் நாம்

உணர்வுத் தூய்மையுடனே
உலவும் எம்மைப் பார்த்து
எங்கிருந்தோ வந்தவன் என்று
எக்காலப் படுத்துகிறாய்

தன்மானம் தவறிவிடாமல்
தொன்மையாய் வாழுமெம்மை
அந்நிய நாட்டினர் போல்
ஆள நினைப்பது தகுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களர்க்கு மட்டுமான
பௌத்த நாடு என்று
புதுக் கதைகள் புனைந்து
புறந்தள்ளல் ஆகுமா?

வாழ வந்தவன் என்று
வரலாறு தன்னை மாற்றி
சிறுபான்மை இனமென்று
சீரழிக்கலாமா?

மூவின மாந்தரும் - இம்
மேன்மை நாட்டுக்குரியோர்
மறந்து போயும் கூட
மறுத்துரைக்க முயலாதீர்!

தினகரன் - 20-04-2016

# தீர்வு

அன்று முதல் இன்று வரை
ஆண்ட அரசுகள்
பிரச்சினையை தீர்க்காததால்
யுத்தம் தின்று தீர்த்தது மக்களை
அரசியல் தலைமைகள்
மென்று விழுங்கின
அமைதிப் பேச்சுக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளும் அரசே
வாழ விடுங்கள் எங்களையும்
ஈழ மண்ணில்
இன முறுகலுக்கு
இது தான் இறுதித் தீர்வு!

* உதயன் - 09-10-2015

# நீதிக்கான நிலைமாறு காலம்

உரிமைப் போர்
உலகத் துணை கொண்டு
அடக்கப்பட்டது...
"இன முறுகலுக்கு
இனிமேல் தான்" தீர்வு - இது
ஆட்சியாளரின் குதிப்பு...

"தமிழர் மனதை வென்றிட
தேவையான பல திட்டங்கள்" - இது
அடிவருடிகளின் மிகைப்பு...
ஆண்டுகள் எட்டு ஓடி மறைந்தது
ஆயுதப் போர் அமைதியுற்று
ஆனதோ ஏதுமில்லை இன்றுவரை...

பரம்பரை மண்ணிழந்து
பிஞ்சுடன் பூக்களும்
போக்கற்ற அகதி வாழ்வில்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்பட்டோர் கதி
காணாமலாக்கியோரால்
காணாமலாக்கப்படுகிறது...

தமிழ்க் கைதிகளின் தடுப்பு
தடையின்றி தொடர்கிறது
தனித் தமிழரென்பதால்...
இது
நீதிக்கான
நிலைமாறு காலம்...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைதியின் கனவு

கைதியின் கனவுக் கதவு
திறந்தே இருக்கிறது - எனினும்
நினைவுகளைக் கடந்து
நனவுகள் தான் உள்ளே நுழைவதில்லை
நிகழ்வுகளுக்காக காத்திருக்கிறது
கைதியின் நிழல்!

அரசியல் கைதியின் விடுதலைக் கனவு
இனவாதப் பூட்டுக்களால்
இறுக்கப்பட்டுக் கிடக்கிறது
உடைக்கவரும்
உண்மை மனிதாபிமானி யார்?

வதைகளில் வாடும்
கைதிகளின் கனவு வட்டம்
சிதிலமடைந்து சிதைகிறது
விழித்திருக்கும் அவன் விழிகளுக்கு
வலிகளே ஆகாரம் - இனி
எப்போ நனவாகும் கைதியின் கனவு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்குடியேறிய போது...

நாம்
இருந்த சொச்சங்கள்
எவையுமில்லை
இறந்த எச்சங்களே
மிஞ்சிக் கிடக்கிறது
விஞ்சிய வஞ்சகத்தின்
விளைச்சல் இது!

உடைந்த வீடு சடைத்த காடு
எலும்புகள் நிறைந்த
என் வீட்டுக் கிணறு
விழுப்புண் அடைந்து வீரியம் இழந்த
பாரிய பன்தரு மரங்கள்!

வான் கழுகு துப்பிய
வெடிக்காத குண்டுகள்
வளாகத்தில் ஆங்காங்கே
'நாகசாகி' யின் நினைவுகள்
நாசிக்குள் கரிக்கிறது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடிப்பிடித்து கூடி விளையாடிய
ஒற்றையடிப் பாதைகள்
தூர்ந்து தோற்றம் மாறிக் கிடக்கிறது !
ஆலயத்தின் அத்திவாரத்தை மட்டுமே
கள்வனிடமிருந்து காப்பாற்றியிருக்கும்
ஆலடிப் பிள்ளையார்!

பற்றைகளால் சூழப்பட்ட பயிர் நிலம்
படைகளின் மண் அணைகளால்
பாதியாக்கப்பட்டு - கண்ணிவெடிகள்
பாத்தியிடப்பட்டுள்ளது!

எனினும்
புத்தர் சிலைகள் மட்டும்
புத்தொளி வீசி - தன்னை
புனிதராக காட்டிக்கொண்டிருக்கிறது
எனது தாயக நிலத்தில் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

ஆழியின் தாண்டவத்தில்
ஆண் துணையிழந்து
வறுமையினை வரவாக்கி
விதைவையானவள் - மகனை
ஈழ விடுதலைக்கு கொடுத்து
அறுவடைக்கு காத்திருந்தாள்!

இறுதிப் போரின்
உறுதி தளர்கையில்
அடுத்த மகனையும் - படை
அணிக்கு கேட்டனர்
அனுப்ப மறுத்தாள்
அன்னை

புதருக்குள் ஒளித்து
பங்கருக்குள் பதுக்கி – அவனுக்கு
பாவாடை சட்டை போட்டு
புது மாத்தளன் போகையில்
பறித்தது அவனுயிர்
பல்குழல் பீரங்கி!

* தினகரன் , உதயன் - 23-02-2014



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருப்பு

அரசியல் வாதிகளுக்கு களிப்பு
ஆட்சியாளருக்கு விருப்பு
அடிவருடிகளுக்கு ஏய்ப்பு
அரசியல் கைதிகளின் இருப்பு

இனவாதிகளுக்கு துரும்பு
மத வாதிகளுக்கு கரும்பு
அடிப்படை வாதிகளுக்கு இனிப்பு
அரசியல் கைதிகளின் இருப்பு

காவலருக்கு படி
ஏவலருக்கு குடி
எட்டப்பருக்கு பிடி
அரசியல் கைதிகளின் இருப்பு

அன்னைக்கு துன்பம்
மனைவிக்கு துயரம்
பிள்ளைகக்கு ஏக்கம்
அரசியல் கைதிகளின் இருப்பு

காவல் துறைக்கு சாட்டு
சட்டத் துறைக்கு சந்தர்ப்பம்
நீதி துறைக்கு சாட்சி
அரசியல் கைதிகளின் இருப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துரதிஷ்டம்

அரசியல் கைதி பட்டம் தாங்கி
ஆண்டுகள் இருபது தீர்ந்தது
இன்னும் சேரவில்லை
எம் இனிய குடும்பத்துடன்

எல்லோரும் நல்லாட்சியில்
இன்பமாக இருக்கின்றனராம்
எமக்கு மட்டும் ஏனோ
இது வாய்க்கவில்லை

உண்ணா நோன்பிருந்தோம்
ஊரும் சேர்ந்திருந்தது
யாரும் மறுக்கவில்லை நம் விடுதலையை
இனவாதிகளைத் தவிர

ஆனாலும் அரசு இன்னும்
அந்நியராய் பார்க்கிறதெம்மை
எமக்காக எம் மக்கள் குரல்
என்றும் ஓயாது ஒலிக்கட்டும்!

* விடுதலையை வலியுறுத்திய உணவு
தவிர்ப்புப் போராட்டத்தின் போது - 2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ லங்கா மாதா

இலங்கை மாதா ஈன்றெடுத்த
ஈழத் தமிழன் எனக்கு
என் மொழியில் வாழ்த்திசைக்க
வழியொன்று தெரியலையே

அர்த்தம் புரிந்த மொழியில்
அன்னை மண் பண்பாடி
அர்த்தம் நான் கொள்ள
அடியேனுக்கு முடியலையே

நான் பிறந்த நானிலத்தை
நானறிந்த அட்சரத்தில்
நா சுவைக்க வாழ்த்திடும்
நாளொன்று கிடைக்கலையே

தாயின் புகழ்பாட - எந்த
தனையனுக்கும் தடையிருக்குமா?
தமிழில் கீதம் பாட - இந்த
தமிழனுக்கு வழியில்லையே

என் தாய்மொழி தமிழ் மொழி
அதனால் தானோ
குட்டித் தமிழ் நாட்டின்
கீர்த்திபாட தகுதியில்லையோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்த தாய்த் தேசத்தின்
சொல்லறியா சிங்களத்தில்
சுருதி மீட்டி பேசும் பண்
சுத்தமாய்ப் புரியலையே

'ஸ்ரீ லங்கா மாதா
நமோ நமோ நமோ மாதா
அப சுந்தர ஸ்ரீ பரினி
சுரதி அதி சோபமான லங்கா'

## சாய்ந்த பொழுதுகளில்

சிறை அறையில்
என்னையே நான் தீண்டிப் பார்க்கிறேன் - பின்
திரும்பிப் பார்க்கிறேன்
தேகம் துடிக்கிறது நிமிர்கிறேன்
சந்தேகமின்றி
சந்தோஷப்படுகிறேன்

சில பொழுதுகளில்
சோர்ந்து போனவனாய்
அயர்ந்து தூங்குகிறேன்
அழுது தீர்க்கிறேன் அம்மாவையெண்ணி
ஐந்து வயதுப் பிள்ளையாய் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறை நட்புகளும் அவ்வப்போது
சலிப்பூட்டுகிறது

பல நேரங்களில்
பேனாவை எடுத்து - மனதில்
பட்டதையெல்லாம் எழுதுகிறேன்
பாதியில் மறந்து
பரிதவிக்கிறேன் - மீதி
நள்ளிரவில் ஞாபகம் வந்து
நாசப்படுத்துகிறது தூக்கத்தை

இயற்கையை எண்ணி
கவிதை புனைய
இயலவில்லை என்னால்
இரும்புக் கதவுக்குள்
இருப்பதை எண்ணி
இரண்டு வரி எழுதுகிறேன் - சிறை
காவலர் வந்து கம்பியிடைவெளியால்
கடதாசியைப் பறிக்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றே குலம்

சிங்களம் தமிழுடன்
முஸ்லிம் பறங்கியர் என
பல்லினச் சமூகம் பரந்துவாழும்
ஈழத் திருநாடு
இலங்கைத் தாய்நாடு

உன்னினம் என்னினம்
என்ற வேறுபாடின்றி
ஒருங்கிசைந்து உழைத்திடுவோம்
எம் தாய் மண்ணிற்காய்

பள்ளிகளும் கோவில்களும்
விகாரைகளும் தேவாலயங்களும்
ஒன்றைத்தான் உரைக்கிறது உலகில்
“ஒன்றே குலம் ஒருவனே தேவன்
அன்பே செய் அனைவரிடத்திலும்“

‘பர்தா’வும் ‘காவியுடை’ யும்
‘பட்டு வேட்டியும்’யும் கூட
பண்பாட்டு உடைகள் தான்
அவரவர் பண்பாடு
அவரவர்க்கு பெரிது
அதனை தடுத்து அநீதி இழைக்காதீர் !

* தினகரன் - 01-12-2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதேசி

என்னைப் படைத்த இறைவனால்
ஏமாற்றப்படுகிறேன்
என்னைப் பிரசவித்த இலங்கையால்
ஏமாற்றப்படுகிறேன்
என்னைப்பற்றிய வரலாற்றினால்
ஏமாற்றப்படுகிறேன்

ஓர் ஆயுள்க் கைதியாக
வாழக் கதியற்று வாடுகிறேன்
ஈழத் தமிழன் நான்
இலங்கைச் சிறைக் கூண்டில்

கைதியென்ற பட்டத்தை
கையில் வைத்துக் கொண்டு
இரவல் தாய்நாடு தேடி
எம்மினமற்றவனிடம் இறைஞ்சுகின்றேன்
'அகதி' எனும் தகுதி கேட்டு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புண்பட்ட மனசோடு

சோற்றுக் கோப்பையுடன்
வாட்டும் வெய்யிலில் வரிசை...
சாகாமல் இருக்க
சாட்டுக்குச் செய்த சமையல்...
தட்டுக்குள் அளவாக அளந்த பின்
தடியெடுத்துத் துரத்துவர்
பசிக்குதென்று பாதிக் கரண்டி கேட்டால்
'புசிக்கவா சிறைக்கு வந்தாய்
புலி என்று பொய் சொல்லி...'
புண்பட்ட மனசோடு
புகுந்திடுவர் செல்லுக்குள்

குளிக்கச் சென்றால்
குட்டிப் பேணியில் எட்டுத் தண்ணி
தொட்டுத் தடவி துடைத்துக் கொள்வோம்...
ஆறு மாதத்திற்கு ஒரு தடவை
ஐ.சி.ஆர்.சி காசு எடுத்து
குடா நாட்டிலிருந்து
கொழும்பு வந்த அம்மா...

'ஐயா...!
சாப்பாடு தண்ணியெல்லாம்
எப்படியப்பா ?'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஐயோ அம்மா...!
அதுவெல்லாம் இங்கு பிரமாதம்
அத்துப்படி எனக்கு...'

அம்மாவின் கண்ணில் இப்போ
அழுவதற்கு நீரில்லை
அதையறிந்த
அன்பு மகனாய் நான்!

## வி(ச)தி

பானையில் உலை கொதிக்க
பாலகன் பசியிருக்க
கொள்ளி விறகெடுக்க
கோடிப் பக்கம் போன தாய்
கொத்துக் குண்டுக்கு
இரையாகிச் சரிகிறாள்

பச்சைப் பாலகன்
எச்சில் விழுங்கியே
பானையை எட்டிப் பார்த்தது...
கொழுந்து விட்டெரிந்த கொடிய தீ
பாலகனையும்
காலனிடம் அனுப்பியது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றழிப்பு

முடமான இள மறியை
முதுகில் சுமந்து
மூவுலகும் உலா வந்த
பகவான் புத்தபிரான்
மூன்று முறை தடம் பதித்த
புண்ணிய பூமியாம்
இலங்கைத் திருநாட்டின்
தலையென விளங்கும் தமிழர் தேசத்தில்
பழம் பெரும் படிப்பகத்தை
பாவிகள் எரித்தனர்

ஏடுகள்... எழுத்துக்கள்...
எண்ணற்ற ஆவணங்கள் என
பண்டைய தமிழரின்
பரம்பரைப் பொக்கிஷங்கள்
புகையாய் அழிந்தது
தமிழர் இதயமெல்லாம்
புண்ணாய் ஆனது!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் நீயும்

| | | |
|---|---|---|
| தோழா | - | நீ |
| 'அம்மே' என்றாய் | - | நான் |
| 'அம்மா' என்றேன் | - | நீ |
| 'தாத்தே' என்றாய் | - | நான் |
| 'அப்பா' என்றேன் | - | நீ |
| 'ஐயா' என்றாய் | - | நான் |
| 'அண்ணா' என்றேன் | - | நீ |
| 'அக்கே' என்றாய் | - | நான் |
| 'அக்கா' என்றேன் | - | நீ |
| 'மல்லி' என்றாய் | - | நான் |
| 'தம்பி' என்றேன் | - | நீ |
| 'சிங்களம்' பேசினாய் | - | நான் |
| 'தமிழ்' பேசினேன் | | |

உனக்கு அருள் புரிந்தார்
புத்த பிரான்
எனக்கு அருள் புரிந்தார்
சிவபிரான்
உனக்கும் எனக்கும் ஒரே நாடு
இறுதியில் இருவரும்
ஒரே மண்ணுக்குள் - அங்கும்
இருக்குமா இனவாதம்?

* தினகரன் - 01-12-2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் புளிச்சாதம்

நான்கு நாளுக்கு முன்னிருந்தே
தேடித் தேடிச் சேர்த்து வைச்ச
தாளிப்புச் சரக்குச் சாமான்கள்...
அருகிலுள்ள "அப்புக் கடையில்"
நல்ல நாட்டரிசி...
கடுகு சீரகம் கனமாய்ப் போட்டு
கமகமக்கும்
அம்மாவின் புளிச்சாதம் .....

விடிகாலை நான்கு மணிக்கு
கோட்டை நோக்கிய
'நகர்சேர்' - யாழ் தேவியில்
தாளித்து தலைவாழை இலையில் கட்டிய
அம்மாவின் புளிச்சாதம் .....

மூன்று மணிக்கு முண்டியடித்து
வரிசையில் முன்னேறி
'மெகசின்' சிறைக்குள் மகனைப் பார்க்க...

சிறைக் காவலர்கள் கிண்டுகிறார்கள் கண்டபடி
சோதனை என்று சொல்லி சாதத்தை
பருக்கைகளாக சிதறுகிறது நிலத்தில்
அம்மாவின் புளிச்சாதம் .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிதிபடாமல் மீதியானதை
விடுதித் தோழமைகளுடன்
விருந்தாக உண்ணுகின்றான்
ஆயுள் அரசியல் கைதி
அடக்க முடியா ஆனந்தம் அவனுக்குள்
ஆம் அது
அம்மாவின் புளிச்சாதம்!

## ஜாலம்

விடுதலைகள்
விடுதலைக்கு ஏங்க
வீடுகளில் வறுமை தழைத்தோங்க
வீரர்களை விபச்சாரிகளாக்கி
வெற்றிகளை
வேறெவரோ கொண்டாட
வெற்றுக் கோஷங்கள்
விடுவிப்பை தாமதிக்க
வேர் அறுத்த விருட்சங்களாய்
உறவுகள் நிலை தடுமாற
வேதனைகளைச் சுமந்து - தமிழ்
கைதிகள் வாட
வார்த்தை ஜாலம் பேசி
வாக்குக் கேட்டு வாசற்படி ஏறுவீரா?
வேள்வித் தீயில் குளிர் காயும்
வேடதாரிகளே...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதும் போதும் உங்கள் புரளிகள்
போராடிப் பெறுகின்றோம்
விடுதலைகள் நாம் விடுதலையை!

## வலியின் வலிகள்

இலங்கையின் கண்கள் திறக்காதோ
இதயத்தின் ஏக்கம் தளராதோ
கைதிகள் வாழ்க்கை விடியாதோ
கைவிலங்கொருநாள் அகலாதோ .....

ஈழத்தில் பிறக்கவைத்தான் எங்களை
இரும்புச் சிறையில் பிழைக்க வைத்தான்
தமிழனாய் முகிழ்க்க வைத்தான் எம்
உறவுகளை கண்ணீரில் மிதக்க வைத்தான் ......

கரு சுமந்த அன்னை கட்டிய மனைவி
உறவுகள் எல்லாம் ஊரில்
திரைகடல் ஓடி திரவியம் தேடி
உழைக்கும் கைகள் இங்கே .....

வெள்ளை உடையே எமக்காய் உண்டு
சிறை தான் எங்கள் வீடு
விடிந்தால் இருளும் விரையும் பொழுது
இது தான் கைதிகள் வாழ்க்கை .....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறையின் அறையில் துயரம் விளைந்தால்
சிந்தை தெளிவது யாரோ
நினைவில் இருக்கும் உறவைத் தவிர
துணையாய் நிலைப்பவர் யாரோ .....

பல நாள் துன்பம் சில நாள் துடிப்பு
ஒவ்வொரு நாளும் வலியே
எண்சான் உடலில் எத்தனை வடுக்கள்
உலகோர் இதனைப் புரிவாரோ .....

# சத்தான வாழும் காலம் செத்துத்தான் போகிறதா?

நெஞ்சமெனும் நெடுந்திரையில்
நிழற்படமாய் வருகிறதே
கொஞ்சிக் கொஞ்சி அமுதூட்டிய உன்
குளிர்ந்த மனதை எண்ணையிலே
நஞ்சுக் கொடி எரியத் துடிக்கின்றேன்
நினைவுகளில் நனைகின்றேன்
வெஞ்சிறையில் தினம் தோறும்
வேகுகின்றேன் நானம்மா

பாசத்தோடு நீ தளுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொழுதுகளை மீட்டுகிறேன்
நேசம் தொடும் நிம்மதிக்காய்
நித்தமும் ஏங்குகிறேன்
வேஷமற்ற அரவணைப்பு
வேறெங்கு கிடைத்து விடும்
துவேஷமான பேச்சுக்கள்
தினம் சிறையில் தொடர்கிறது

வல்லதொரு பள்ளியிலே
வளமாக நான் படித்தேன்
கள்ளமில்லா வளர்ப்பிருந்தும்
கால மாற்றம் வென்றதுவே
சொல்லவொணாத் துயரோடு
சிறையிலிருக்கும் நிலையாச்சு
அல்லும் பகலும் வருந்துகிறேன்
ஆயுள் கைதி மகனம்மா

முத்தான துணையின் முகம்
நித்தம் கனவில் தெரிகிறது
சொத்தான எந்தன் பிள்ளை
சுகம் காணத் தவிக்கிறேன்
எத்தனை ஆண்டுகள் தான்
இச் சிறையில் வாழ்வெனக்கு
சத்தான வாழும் காலம்
செத்துத்தான் போகிறதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை

கருவறையில் முளைவிட்டு
கல்வியறையில் கிளைவிட்டு
காவலறையில் விலங்கிட்டு
நீதியறையில் நிறுத்தப்பட்டு
சிறையறையில் வாடுகிறான்
சின்ன மகன் செந்தமிழன்

கணபதிக்கு வைத்த நேர்த்தி
கந்தனுக்கு கட்டிய காணிக்கை
கருமாரிக்கு இட்ட படையல்
காளிக்கு உடைத்த தேங்காய்
அனுமாருக்கு போட்ட வெற்றிலை மாலை
ஆதிசேடனுக்கு சாத்திய துளசிச்சரம்

அத்தனைக்கும் கிடைக்காத விடுதலை
நல்லாட்சியில் கிட்டுமென்று
அம்மா போட்ட ஒட்டு
அநியாயமாய் ஆச்சு
அடுத்த தேர்தல் வரை
அவர்கள் பாடு கொண்டாட்டம்
அரசியல் கைதிகள் திண்டாட்டம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கும் தானாம்

மனிதத்துவம் மறுக்கப்பட்டு
மகத்துவம் அழிக்கப்பட்டு
மூடிய அறைகளுக்குள்
வாழ்க்கையைத் தொலைத்து
வேதனையின் விளிம்பில்
விடுதலையை தேடிக்கொண்டிருப்போரே
உங்களுக்கும் தானாம்
மனித உரிமைகள் தினம்...

கலவரையறையற்ற
கம்பிக்கூட்டு வாழ்வில் காவுகொள்ளப்பட்டு
சத்தான இளமையை
சிறைகளுக்குள் சிதைத்து கொண்டிருப்போரே
உங்களுக்கும் தானாம்
மனித உரிமைகள் தினம்...

உரிமைக் குரல் உயர்த்தியதால்
உண்மைக்குப் புறம்பான
ஒப்புதல் பெறப்பட்டு
இருபது வருடங்களாய்
இரும்புக் கதவுகளுக்குள்
ஏங்கிக் கொண்டிருப்போரே
உங்களுக்கும் தானாம்
மனித உரிமைகள் தினம் ...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கர சட்டங்களில் பலியிடப்பட்டு
பந்த பாசங்கள் பிடுங்கப்பட்டு
நல்லாட்சியிலும் நியாயமின்றி
நடைபிணமாய் சிறையிருக்கும்
சிறுபான்மை இனமொன்றின்
சூழ்நிலைக் கைதிகளே
உங்களுக்கும் தானாம்
மனித உரிமைகள் தினம் ....

* சர்வதேச மனித உரிமைகள் தினம் - 10-12-2015

ஞானம் சஞ்சிகை 189 வது இதழ்

# அமைதி

வதைகளினால் வெந்து தணிந்த
இளைஞர்களும் யுவதிகளும்
இருந்து சென்றுவிட்ட பின்பு...

இரும்புச் சிறையில்
அமைதி அலரத் தலைப்படுகிறது
அவர்களின் துயரத்தை எண்ணி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் விலை

சிறை அறையில்
என்னை நான் சுரண்டிப் பார்க்கிறேன்
சோர்ந்து வீழ்கிறேன் - மீண்டும்
சுரண்டிப் பார்க்கிறேன்
சோர்வு தளர்கிறேன்

அழுத்தம் கொள்கிறேன்
அதை அகற்றத் துடிக்கிறேன்
அடம் பிடிக்கிறது - நானோ
வடம் பிடிக்கிறேன்

நித்திரையை அழைக்கிறேன் - மறுத்து
சித்திரவதை செய்கிறது
கெஞ்சுகிறேன்
மிஞ்சிக் கொண்டு முளைக்கிறது
வஞ்சகரின் வலிகள்

அரசியல் வாக்குறுதிகள்
வங்கிகளில் வளர்கிறது
வயிற்றுப் பசி - கைதிகளின்
விடுதலையை விலை பேசுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுமடல்

இலங்கைச் சிறையிலிருந்து
ஈழத் தமிழன்
சிங்களச் சகோதரனுக்கு எழுதும்
சிறுமடல்

எழுபத்து எட்டில்
இம் மண்ணில் அவதரித்த என்னை
இலங்கையர் என்றனர்
எனை ஈண்றவர்கள்

'தட்டுத் தடுமாறி தவழ்ந்தெழுந்த
தாய் மண் அது உன் தமிழ் மண்'
என் முன்பள்ளி ஆசிரியையின்
முதல் உபதேசம் இது

பாலர் பருவத்திலேயே
பரீட்சை படிப்புகள் பலவற்றை
பதுங்கு குழிகளுக்குள் படித்து
பாஸ் பண்ணிய ஞாபகம்

சகோதரனே உனக்கு
பதுங்கு குழிகள்
பயனற்றதால் - அவை
பரீட்சயமற்றவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவயது முதல்
குண்டு பட்டு குருதி படிந்து
சிதிலமடைந்த பள்ளிகளே - என்
கல்லூரிகள்

சர்வ வளம் மிக்க
சர்வதேச பள்ளிகளே உனக்கு
சீர் கல்வி
செப்பியிருக்கும் சகோதரா

பள்ளம் மேடு நிறைந்த
பாதை வழியே
பாதச் செருப்பின்றி
பாடசாலை சென்றவன் நான்

சொந்த சொகுசு காரில்
சங்கடமின்றி சமர்த்தாய் அமர்ந்து
சாலையோர தூசியின்றி
கல்வி கற்றவன் நீ

விடுமுறை நாட்களில்
கதிர் பொறுக்கி காசு சேர்த்து
மிதிவண்டி ஒன்று வாங்கி
மேல் பள்ளி சென்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்திப் பொழுது அரட்டையடிக்க
அப்பாவின் சம்பளத்தில்
மூன்றரை இலட்சத்திற்கு - நீ
மோட்டார் சைக்கிள் வாங்குகிறாய்

மேற்கொண்டு படிக்க முடியவில்லை
மேலாலும் கீழாலும் படையெடுப்பு
ஊர் விட்டு ஊர் விட்டு ஒடும்
உபத்திரமான என் வாழ்வு

மேற்படிப்பு நீ முடித்து
மேதையாய் ஆகினாய்
ஊருக்குள் பெரிய
உத்தியோகமும் பார்க்கிறாய்

சொந்த மண்ணில் சுய வாழ்வின்றி
சேனை ஏவி துரத்தியதால்
வாழ்வுரிமை நாம் கேட்டு
வடம் பிடித்தோம்

பௌத்த நாடு என்று சொல்;லி
பாமரனை தூண்டிவிட்டு
பழந்தமிழர் குடிநிலத்தை
பாழ் படுத்த கோஷமிடுகிறாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள ஸ்ரீ யை - எங்கள்
பெண்களின் மார்பினில்
சித்திரமாய் செதுக்கிய நீங்கள்
சிறுபான்மையென்று புறமொதுக்கு றீங்கள்

நித்தம் நிம்மதி இழந்ததால்
நீட்டினோம் விரலை நீசரை நோக்கி
நாசமாய் ஆக்கினர் நம் குடியை
நரபலியிட்டனர் எம் இனத்தை

பண்டைய தமிழனை
படையேவி பழி தீர்த்துவிட்டு
பாதைவழி பட்டாசு கொழுத்தி
பாற்சோறு கொடுத்தீர்கள்

மனிதாபிமானப் போரெனக் கூறி
மக்களைக் கொன்றழித்து
மங்கையர் மானம் பறித்தோரை
மண்மீட்ட மகானென மாலை சூடுகிறீர்கள்

போருக்குப் பின்னரும் பண்டைய எம் நிலத்தை
பாதுகாப்புக் கருதி பறித்து எடுக்கிறீர்கள்
ஆண்டுகள் கடந்த அகதி வாழ்வு
தமிழரெமக்கென்ன தலையெழுத்தா ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணாமலாக்கப்பட்டவர்களை
கையளித்தீர்களா? கண்டுபிடித்தீர்களா?
கொடுஞ் சிறை இருக்கும் - தமிழ்
கைதிகளை தன்னும் விடுவித்தீர்களா?

தெற்கிலிருந்து வடக்கிற்கு
தினம் போகும் சுற்றுலாவில் - எம்
சுற்றங்களின் நிலை பற்றி
சற்றேனும் சிந்தித்தீர்களா?

அங்கம் இழந்த எங்கள் உறவுகள்
அரைமட்ட குடிசை வீடுகள்
குண்டுக்கு இரையான கோவில் குளங்கள்
படையழித்த பள்ளிக்கூடங்கள்

வாழ்விழந்த விதவைத் தாய்மார்கள்
வழி தவறிய சிறு பிஞ்சுகள்
கலை இழந்த வன வளங்கள்
காணாமல்ப் போன பனை மரங்கள்

தோண்டப்பட்ட புதைகுழிகள்
தகர்க்கப்பட்ட துயிலுமில்லங்கள்
தூர்த்தப்படும் தமிழர் சின்னங்கள்
துரத்தப்படும் இனப் பண்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திகள் எங்கும் சாராயக் கடைகள்
சந்து பொந்துகளில் பரத்தையர் விடுதிகள்
பாதுகாப்புத் தரப்பினரின் பல்பொருள் அங்காடிகள்
படைக்கலங்களின் மிகைப் பயணங்கள்

புதிய பெரிய படைத் தூபிகள்
தமிழர் அழிப்பின் துன்பியல் பதிவுகள்
ஊருக்குள்ளும் மினி முகாம்கள்
வீதிகளெங்கும் ஆமிக்காரர்கள்

எந்தையர் ஆண்ட எங்கள் நிலத்தை
சுற்றிப் பார்க்கச் செல்லும்
உங்கள் கண்களுக்கு அவைகளெல்லாம்
பசுமைக் காட்சிகளாதலால் படம் பிடித்துச் செல்கிறீர்கள்

எப்படிச் சகோதரனே இன உறவு பிறக்கும்?
எடுத்துச் சொல்லடா உன் சொந்தங்களுக்கு
இனியும் வெண்டாம் பேரினவாதம்
இலங்கைத் தீவில் இணக்கமாய் வாழ்ந்திடலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவருக்காக...

அர்ச்சகர் கொடுத்த
கோவில் நூலையும் திருநீறு சந்தணத்தையும்
பக்குவமாய் சுற்றிக் கொண்டு
பார்க்கப் போகிறாள்
சிறையிலிருக்கும் கணவனை

கலியாண வீடொன்றில்
கறி மணக்க சாப்பிடுகையில்
கணவன் நினைவு
'என்னத்த...எப்பிடிச் சாப்பிட்டாரோ...'
கை கழுவ விரைகிறாள்
கைதியின் மனைவி

வேலைத் தளத்தில் கிடைத்த
வெளியூர் தின்பண்டங்கள்
வாயருகில் செல்கையில்
'அவருக்கு இவையெல்லாம் கிடைக்குமா?'
அகன்று விலகுகிறது அவள் கையிலிருக்கும்
வெளியூர் தின்பண்டங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்

தரப்படுத்தலில் பிறந்து
தாய் மொழியில் தவழ்ந்து
நிலப் பறிப்பில் நிமிர்ந்து
நேர்த்தியாக வளர்க்கப்பட்டது
நியாய விடுதலைப் போர்...
பேச்சு வார்த்தையில்
பெற்றுவிடலாமென்று
பெருமிதமாய் நின்று
பேரங்கள் பேசிப் பேசி
சோரங்கள் போனது தான்
வரலாற்றுத் தவறாகி
வரவழைத்தது ஈழப்போரை...
விடுதலைப் போரை விலைபேசி
பயங்கரவாதமென பறைசாற்றி
வல்லரசுகளின் வலிமை கொண்டு
தமிழினப் புனிதப் போரை
தலைகீழாய் மாற்றியதால்
முள்ளிவாய்க்காலும்
முட்கம்பி வாழ்க்கையும்
மீதமாய் போனது...
நேச நாட்டுக் கதவைத் தட்டி
நிம்மதியாய் வாழ நீதி கேட்டோம்
வன் முறை வார்ப்புக்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்து துடி துடித்தோம்
வேடிக்கை பார்த்த வர்க்கம்
மீண்டும் முருங்கை ஏறி
பதின்மூன்றில் ஏதோ
பச்சிலை விரித்துப் பகர்வதாய்
பாசாங்கு காட்டுகிறது...
காணிகள் பறிப்பு
கைதிகள் சிறையிருப்பு
காணாமலாக்கப்பட்டோர் கதை நீடிப்பு
ஈழ நிலமெங்கும் இராணுவக் குவிப்பு
என எம் மண்ணில் இன்றும்
நிழல் யுத்தம் நீழ்கிறது...
வஞ்சிக்கப்படும் எமக்கு
வளமான தீர்வொன்று
கெஞ்சிக் கேட்டாலும்
கிஞ்சிட்டும் கிடைக்குமா?
கொஞ்சிக் குலாவும் இணக்க அரசியலால்
குலத்தை சீரழிக்கும்
கோடாரிக் காம்புகளின்
கனவுகள் பலித்திடுமா...
கொஞ்சம் சிந்திப்போம்
கொதித்தெழத் தேவையில்லை
காந்திவழி கொள்கை கொண்டு
கண்ணியமாய்ப் போராடி
கனமான தமிழினத்தை
கச்சிதமாய் வளர்த்திடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியும் கனவு வாழ்வு

கனவு தன்னில் அழியும் வாழ்வில்
கஷ்டமதை தாங்கித் தாங்கி
பழக்கப்பட்டு காத்திருக்கிறோம்
பாழ் பட்ட கைதிகள் நாம்

வலித்த வடுக்களால்
விம்பக் கண்ணாடியின்
வெடிப்புகளாகிப் போன
எங்கள் வாழ்க்கையை
ஏக்கமாய்ப் பார்த்து பயணிக்கிறோம்

நவீனங்கள் நாமறியாது
நெஞ்சறை எங்குமே நிறைந்திருக்கும்
வதையின் வலிகள்
பரந்து படர்கின்றன

காதை ஊடறுக்கும்
வடுக்களின் ஒலி வடிவம்
வருடங்கள் கடந்தும் எதிரொலிக்கிறது
இன்றுகளிலும்

தலைவிதியென்று எம்மால் எதையும்
தலைப்பிட முடியாது தொடரும் ஏக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இருப்பை தீண்டிப் பார்க்கும் - சில
தேவையற்றவைகள் தேவையாகிப் போகிறது

கடந்த பல வருடங்கள்
கற்பனை கனவுகளில் வாழ்ந்து விட்ட
எமது மனங்கள்
கனவுகளையே நம்ப மறுக்கிறது

எம்மைச் சுற்றி துன்னபத்தின் நிழல்கள்
சுழன்று கொண்டிருக்கிறது
அரசியல் கைதிகளுக்கு மட்டும்
அநீதி வாழ்க்கை என அடக்கப்பட்டுக் கிடக்கிறோம்

கனவு தன்னில் அழியும் வாழ்வில்!

## தமிழனுக்காக

தமிழனை
தூக்கி வளர்ப்பதில் அல்ல
அவனை யார்
துகிலுரிப்பது என்பதிலேயே
தொலைகிறது
இலங்கைத் தமிழனின்
இன வரலாறு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருள் வாழ்க்கை

எட்டிக் கால் வைக்கமுடியாத
எட்டு x மூன்று அடிக் காம்பறாவில்
ஆறுபேர் அடுக்கப்பட்டு
அடைக்கப்படுகிறோம் - மாலை
ஆறு மணிக்கெல்லாம் !

வலி வியாதி வாந்தி பேதி
வயிற்றோட்டம் வந்தாலும்
சின்னதொரு தகரப் பேணிக்குள்
சிறுநீருடன் மலத்தையும் கழிக்கும்
சீரழிந்த நரகச் சிறை வாழ்க்கை !

பீ மணமும்
பிற வாயு நாற்றமும்
வயிற்றைக் குமட்டினாலும்
விடியும் வரை திறக்கப்படாத
சிற்றறைக் கம்பிக் கதவு !

கண்ணீரைச் சிந்திச் சிந்தி
கண்ணிரண்டும் உலர்ந்து
உறவுகளை எண்ணி எண்ணி
இதயமும் வரண்டு
இருள் வாழ்க்கை தொடர்கிறது !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மகளே

தை பிறந்தால் வழி பிறக்கும்
தமிழர் வாழ்வில் ஒளி பிறக்குமா?
மாற்றங்கள் படைத்திட்ட - இத்
தைப் பொங்கல்
ஏற்றங்களை தந்திடுமா?

வலி.வடக்கு ஏதிலிகள்
வாழ்விடந்தான் கிடைத்திடுமா?
சிறையிருக்கும் இளையோரின்
அறைக் கதவு திறந்திடுமா?
மீள் குடியேற்றங்கள் - புது
மேன்மைகள் கண்டிடுமா?
'மைத்திரி அரசின்'
வாக்குறுதிகள் வளம் பெறுமா?

இத்தனையும் நடக்குமென்று
இப் பொங்கல் திருநாளில்
எல்லோரும் நம்பிடுவோம்
ஏற்றங்கள் கண்டிடுவோம்!

* தைப்பொங்கல் - 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறிசின் பேசண்ட்

கட்டிலுடன் கட்டப்பட்டிருக்கிறது
இரும்புச் சங்கிலி கொண்டு - எனது
இடது கால்...
என்னருகில்
இயங்கு நிலை துப்பாக்கியுடன்
இமை வெட்டாது இளம் காக்கியொன்று ...

இயலாமைகளை சுமந்தபடி
ஏராளமான கட்டில்கள்...
முக்கல் , முனகல்
சிராய்ப்புகள் , சிதிலங்கள் என
சிக்கல்கள் எக்கச் செக்கம்...
ஒதுக்குப் புறமாயிருந்த கட்டில் ஒன்றில் நான்
ஒருவகை வயிற்று வியாதிக்கு
'ஒப்பரேஷன்' செய்த நிலையில் ....

பெற்றவர்கள் , பிள்ளைகள்
உற்றார், உடன் பிறந்தோர்
காலை , மதியம், மாலை என
கதைத்துப் பேசியது போல் ஒவ்வொருவரும்
ஒத்து மாறி வந்து செல்கிறார்கள் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருபவர்கள்
நலம் விசாரித்து
நாலு வார்த்தை கதைக்கிறார்கள்...
நலம் கெடுக்கும் நவீனரக
பண்டங்கள்,பானங்களை
பகட்டாகக் கொடுக்கிறார்கள்...
சிலர் சிரித்துப் பேசுகிறார்கள்...
சிலர் சோர்வாய்ப் பேசுகிறார்கள்...
என்னைத் தவிர எல்லோருடனும் ....

அரசியல் கைதி நான்
அரச வைத்தியசாலையில்
அநாதை நோயாளியாக !

* சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில்
அனுமதிக்கப்பட்டிருந்த போது - 2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் தேசம்

மாங்கனி இலங்கைத் தீவின்
மகுடமாய் விளங்கும்
மாண்புறு ஈழதேசம்...
வேண்டிய தொழில்கள் உண்டு
விரும்பிய வாழ்க்கை உண்டு
வேற்றுமை இன்றி நாமும்
ஒற்றுமை ஓங்கச் செய்தால்
ஏற்றம் கண்டு எம் மண்ணில்
இன்னலின்றி உயாந்திடலாம் !

மீன் வளம் நிறைந்து காணும்
மா கடல் கொண்ட தேசம்
பனையுடன் பழ மரங்கள்
பால் தரும் பசு இனங்கள்
வேளாண்மை விளைச்சல் என்று
வளம் மிகு எங்கள் தேசம்...
முதுசங்கள் பல இருந்தும்
முறையான நிம்மதி தான்
முழுதாக கிடைக்கலையே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேரம்

ஒன்றாக உண்ணுகிறோம்
ஒன்றாக உறங்குகிறோம்
ஒரு தாய் பிள்ளைகளில்லை
ஒன்றாக வளரவுமில்லை
எவர் எவர்க்கு எப்போது
விடுதலை விளையுமென்று
யாருக்கும் தெரிவதுமில்லை
யாவரும் தமிழ்க் கைதிகள் !

தடுத்து வைப்பு விடுவிப்பு என
தரம் பிரிப்பதெல்லாம்
குற்றுயிராக்கிப் பெறப்பட்ட
'குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களே'
'பயங்கரவாத தடை'ச் சட்டதில் - இது
பொதுவான பின்பற்றல்
பாழாய் போன சட்டம் - தமிழனை
படுத்தும் பாடு பெரும்பாடு!

சோடிக்கப்பட்ட சாட்சிகள்
சூட்டப்பட்ட 'புலிப்' பட்டங்கள்
சட்டத்தின் சாட்டைகளுக்கு
சாமரம் வீசுகிறது...
சட்டத் தரணி பிடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாகசமாய் வாதாடி
சுத்தவாளி ஆகிவர
சொத்துச் சுகங்களில்லை !

சேர்த்து வைத்த அத்தனையும்
சேர்த்து அழித்த யுத்தம்
சோரம் போகா மானத்தை மட்டும்
சீண்ட முடியாதென சலித்தோய்ந்துவிட்டது ...
சட்டமும் நீதியும் வென்றது
சத்தியமும் நேர்மையும் தோற்றது
ஆயுள் தண்டனைக் கைதியாய்
அரசியல் கைதி மாற்றப்படுகிறான்

## ???

இனவாதமற்ற இலங்கை கேட்டேன்
ஈழத் தமிழர் விடியல் கேட்டேன்
மிதவாதமற்ற மதங்கள் கேட்டேன்
மனிதம் மதிக்கும் மார்க்கம் கேட்டேன்

சுத்தமான சுதந்திரம் கேட்டேன்
சுயநலமில்லா தேசம் கேட்டேன்
நேர்த்தியாய் வாழ நிலத்தைக் கேட்டேன்
நிமிர்ந்து நடக்க பாதை கேட்டேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழை தமிழாய் வளர்க்கக் கேட்டேன்
தாய்மண் செழிக்க சேவைகள் கேட்டேன்
கலாசாரமழியா பண்பாடு கேட்டேன்
கந்த புராண கலாசாரம் கேட்டேன்

வன்முறை அற்ற நாட்டைக் கேட்டேன்
வரலாறு உள்ள தமிழைக் கேட்டேன்
சமமாய் வாழ சந்தர்ப்பம் கேட்டேன்
சங்கத் தமிழை வாழ்த்தக் கேட்டேன்

போதை இல்லா நாட்டைக் கேட்டேன்
பெண்ணை மதிக்கும் சமூகம் கேட்டேன்
பாமரர் பசியை போக்கக் கேட்டேன்
பாலகர் வாழ்வை மீட்கக் கேட்டேன்

சீதனம் அற்ற திருமணம் கேட்டேன்
சாதிப் பிரிவினை ஒழிக்கக் கேட்டேன்
பாரதி கண்ட பெண்ணைக் கேட்டேன்
பாரினில் புதுமை படைக்கக் கேட்டேன்

இத்தனை கேட்டும் கிடைக்காவிட்டால்
இனியும் எதுவும் நடக்கா விட்டால்
இளைஞர் கனவு பலிக்காவிட்டால்
? ? ? ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையற்றவர்

கள்ளத் தனமாய் கடிதம் எழுதி
காவலரிடம் கொடுத்து விட்டேன்
கவலையோடு காத்திருக்கும் அன்னைக்கு...

கடிதத்தைப் பார்த்து
கண்ணீர் சொரிந்திருப்பாளா...?
கவலை மறந்திருப்பாளா...?

கற்பனையில் மூழ்கியிருந்தேன்
காலை வேளை கழிவு வாய்க்காலில்
கடிதம் மிதந்து செல்கிறது...

காவலர் செயல் கண்டு
கனக்கிறது என் இதயம்
கண்ணீரும் கசிகிறது...

கசாப்புக் கடையில் கருணை கிடைக்குமா?
காக்கிச் சட்டைகளுக்கு
கண்ணீரின் உப்புச்சுவை கரிக்குமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறையிலிருந்து சிங்கள சகோதரனுக்கு

ஓடித் திரிந்த ஊர்கள்
உற்றவர் உயிர்கள்
உழைத்து சேர்த்த உடமைகள்
ஒப்பற்ற கௌரவம்
அத்தனையும் இழந்த
உள்நாட்டு ஏதிலிகள்...

மனித உரிமையை மதிப்பதாக
மார் தட்டும் மாங்கனித் தீவினில்
சகோதர சமூகத்திற்கு
சம உரிமை வழங்க
சங்கடங்கள் எதற்கு
சொல்லுங்கள் சோதரரே...

சொந்த மண் வாசிகளை
வந்தவன் என்று சொல்லி
அந்நியராய் நோக்கும்
ஆட்சி அதிகார பீடங்கள்
எம்மை ஆற்றுப்படுத்த முயலவில்லையே
அர்த்தப்படுமா நீடித்த நல்லிணக்கம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவின் விளிம்பு வரை
சென்று மீண்ட
சாதாரண சனங்கள் எமக்கு
சமரசம் பேசவும்
சமமாக வாழவும்
சந்தர்ப்பம் இல்லையா...

உயிராக நேசித்து
ஒன்றாக உடனிருந்து
உண்டு மகிழ்ந்து உயிர் துறந்த
உடன் பிறப்புக்களை எண்ணி
ஒரு நெய்த் தீபமேற்ற
உரிமையில்லையா...

சிங்கள மரத்தைச் சுற்றும்
சிறு கொடிகளாக எம்மை
சித்தரிக்க முயல்வோரே
சமத்துவம் சமதர்மம் எனும்
புத்தரின் போதனைகளை
புறந்தள்ளல் ஆகுமா...

பெரும்பான்மை இனத்துவத்தின்
பேரின கருத்துருவாக்கம்
பொன்னான இந்நாட்டை
பீடிக்கும் அந் நாள் வரை
சிறுபான்மை இனத்துவத்தின்
சிதிலத்தில் மாற்றமேது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனவாத அரசியலால்
இருவேறு துருவங்களாய்
ஏட்டிக்குப் போட்டி போட்டு
இன முறுகல் வளர்க்கப்படுகிறது ...
ஆளுமினம் வாழுமினம் என்று
அர்த்தம் வேறு சூட்டப்படுகிறது...

முள்ளிவாய்க்காலோடு
மனவலியும் மனவடுவும்
மலிவான சுமையாகி
மரணத்துள் வாழும் எம்மை
பௌத்த வழி வந்தவர்கள்
பிரித்து ஆளுதல் தகுமோ...

சிங்களத்துச் சொந்தங்களே
சிந்தித்துப் பாருங்கள் - நாம்
நாட்டை ஆளக் கேட்கவில்லை
நமக்கென்ற உரிமையோடு
சேர்ந்து வாழ நினைக்கின்றோம்
சோதரரே இது தவறா...

சகோதரத்துவம் சமநீதி
உனக்குள்ளும் பிறக்கிறது - அதை
நாட்டை ஆளும் வேட்டை நோக்கு
நமக்குத் தர மறுக்கிறது ...
மனித வாழ்க்கை அர்த்தமதை
மரணத்துள் திணிக்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதய சுத்தியோடு இரு இனமும்
புரிந்துணர்வோடு அறிந்துணர்ந்தால்
நல்ல பல மாற்றங்கள்
நமக்குள் தினம் துளிர்க்கும்
நாடு பலம் பெறும்
நாமும் வளம் பெறுவோம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்கம்

பாதை தெருக்கள் புனரமைத்து
பாலங்கள் போட்டாலும்
'காங்கேசன் துறை'வரை
'யாழ் தேவி' ஊர்ந்தாலும்
வெள்ளைப் புறாக்கள்
விழாக்களில் பறந்தாலும்
நல்லிணக்க மந்திரத்தை
நாவால் மட்டும் சொல்வதாலும்
சண்டை முடிந்து சத்தங்கள் ஓய்ந்தாலும்
புணர்வாழ்வுத் திருமணங்கள்
பூமாலை ஏற்றாலும்
வாக்கு வேட்டைக்காக
வாக்குறுதி அளித்தாலும்
'மஹா வம்ச ' த்தின் மேன்மைகளை
மாற்றியே எழுதினாலும்
இனவாதக் கொடியவர்கள்
இருக்கும் வரை நம் நட்டில்
'நல்லிணக்கம்' என்பது
'நா' வரை மட்டுமே!

* சுடர் ஒளி - 10-01-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சன்மானம்

இலக்குகள் தவறாத
இறைமையுள்ள தமிழனாய்
இத்தரணி வாழ
உரிமை வழி தொடர்ந்தது
இலங்கைத் தாயின் இறைமை மீறலாம் ....
இரும்புக் கதவுகளுக்குள்
இறுகிக் கிடக்கின்றோம்...

உரிமைகள் கேட்டதனால்
பிரிவினை எனப் பெயர் சூட்டி
படுசிறையில் தள்ளினர் - அதற்கு
'பயங்கரவாத தடைச் சட்டம்'
பலம் அளித்து வரமளித்தது...

இன்னார் இனியார் என்றிலாது
இலக்கு வைக்கப்பட்டு
எண்ணற்ற விடலைகள்
ஏற்றப்பட்டனர் கழுமரம்
இன்றுவரை இறக்கப்படவேயில்லை
இந்த ஜனநாயக மண்ணில்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நக்கல் பிரதிநிதி ?

இனவாத மூலதனத்தில்
கருவாகும் அரசியல்
குலபேத மொழிபேசி
கொன்றழிக்கும் குடிகளை !

கோடிகளுக்கு கேடிகளாகும்
குண்டர் குழு அரசியல்
கட்சிவிட்டு கட்சி தாவும்
கொள்கையற்ற கோமாளிகள் !

சம்பாதிக்க சலுகை ஈட்ட
சொந்தங்களுக்கு சொத்துச் சேர்க்க
சொகுசு வண்டியில் சுற்றித்திரிய
சாக்கடை அரசியல் சாமரம் வீசுகிறது !

வாக்களித்த மேன் மக்கள்
(அப்)பாவிகளாய் பார்த்திருக்க
நாடாளு மன்றில் நாசகாரச் சண்டை
நாடெப்போ நிலைபெறுவது !

பெரும்பான்மை சிறுபான்மை என
பிரித்துப் பேதம் பார்க்காது
சிங்களம் தமிழுடன் முஸ்லிம் இணைந்து
சேர்ந்து வாழ்ந்திடலே சிறந்த அரசியல் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனின் தலைவிதியா?

சுதந்திர இலங்கையில்
சுதந்திரம் இன்றி
சுந்தரத் தமிழனென்று
சுய விளம்பரம் செய்கிறார்

உண்மைச் சுதந்திரம் வேண்டி
ஊதிய மகுடிக்கு
ஒன்று பட்டவர்கள் இன்று - தம்
விடுதலைச் சுதந்திரத்துக்காய்
வாடுகிறார் சிறைகளில்

கலியுக சிலுவையை
கரமேந்தியவர்களை
காலமாற்றம் பிறரிடம்
கையேந்த வைத்துள்ளது

இது
தமிழனின் தலைவிதியா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம(மி)த வாதம்

சமாதானங்களை சாகடிப்பது
சாக்கடை அரசியலென்று
சான்றோர் சொன்னார் - மண்ணை
ஆண்டோர் சொல்லவில்லை
ஆதிக்குப் பின் சாதியை வகுத்து
சாகியம் பிரித்தது
பாமரன் அல்ல பணக்காரன் !

இனங்களைப் பிரித்து
இருவேறாக்கி
குணங்களைப் பிரித்து
குரோதம் படைத்தது
இறைவன் அல்ல இனவாதிகளே !

சங்கங்கள் சபைகள் அமைத்து
சமயப் பெயரால் சுயலாபமீட்டிட
படைகள் பட்டாளங்கள்
புறப்பட்ட போதே - படைத்தவனும்
புறப்பட்டு விட்டான்
சந்நிதானங்களில் இருந்து !

* உதயன் - 25-12-2013



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வதைக்கூடம்

நான்கு பக்கங்களிலும்
நாசிகள் சுரண்டுகின்ற போது
கொஞ்சம் கொஞ்சமாக குலைநடுங்குகிறது

மனக் கண்ணில்
கோயில் விக்கிரகங்கள்

'கும்பிடாதே என்னை ' என
குண்டாந்தடிகள் கொடூரம் புரிகிறது

அன்னியர்கள் சுற்றிவர
அகத்திரையில் 'ஐயோ' ஒலம்
சிறைக் கம்பிகளின் மொழியில்
சுருதிக்கு இடம் ஏது?

கோவிலில்லா ஊரில் குடியிருக்கவில்லை
கோபுர தரிசனம் நான் மறக்கவில்லை
'கும்பிட்ட தெய்வம் கைவிடாதென்று'
கட்டியம் சொன்னவர்கள் எங்கே?

கை விலங்குடன் கட்டி வைத்து
குருதிப் பரிசோதனை...

கொள்கை தடுமாறுகிறது
குல மானம் விலைபேசப்படுகிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறைக் குருவியின் கேவல்

கம்பிகளைப் பார்த்துப் பார்த்து
காலங்கள் போகுது
கைவிலங்கைப் போடப் போட
கவலைகளும் நீளுது

கனவுகள் கண்டு கண்டு
கண்களும் சோருது
அஹிம்சையில் போராடிப் போராடி
ஆயுள் காலம் தேயுது
ஆதரவைத் தேடித் தேடி
அரசியல் கைதி வாடிட
ஆர்ப்பாட்டமென அலைந்து அலைந்து
அவன் வீட்டு அடுப்பு அணையுது

வழக்குகள் பேசிப் பேசி
குடும்பம் வங்குரோத்தாய் ஆச்சிது
வாக்குறுதிகளை கேட்டுக் கேட்டு
காதுகளும் புளிச்சுப் போச்சுது

அநாதரவாய் ஏங்கி ஏங்கி
அடைபட்ட சிறைவாழ்வு கழியுது
அரசாங்கமோ பார்த்து பார்த்து
அசமந்தமாய் இருக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனவு - நினைவு

வடக்கு கிழக்கெங்கும்
படையெடுப்புக்கள்
பாடசாலையெங்கும்
பதுங்கு குழிகள்
வீடுகள் தோறும் விழும்
பல்குழல் உந்து கணைகள்
பூக்களும் பிஞ்சுகளும்
புளுதித் தரைகளில்
பூமி எங்கும் பிய்ந்த உடல்களும்
பிண வாடையும்

'ஆ...என்
மனைவியும் மகளும்...?
ஐயோ...ஐயோ...
மறுபடியும் மனித வேட்டையா?'

'அடோ மொகத சத்த...?'
காக்கிச் சட்டையின் கறார் கேள்வி

இமை திறந்து பார்த்தேன்
சிறையறை படுக்கையில் நான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரீர விடுதலைக்காக...

கம்பிகள் சூழ்ந்த கருக்கல் அறைக்குள்
கருணை நாடும் கைதியாய்
ஒவ்வொரு காலைப் பொழுதிலும்
ஒய்வின்றித் தேடுகிறேன்...
ஒளியிழந்த கண்களில்
விழி நீர் மட்டும் வழிகிறது
விடியலைக் காணவில்லை...

அன்று
சமூக விடுதலையை நேசித்த நான்
இன்று
சரீர விடுதலைக்காக ஏங்குகிறேன்...
சரித்திரங்கள் மாறியதால்
சித்திரங்கள் சோபையிழந்ததா?
தெரியவில்லை இப்போ எனக்கு...

'நான் தான் அவனென்று'
நாக் கூசாது உரைத்து நிமிர
முடியவில்லை முள்ளிவாய்க்காலுக்குப் பின்...
மூடிய முட்சிறைக்குள்
மூச்சிழந்து துடிக்கின்றேன் - இது
மடியும் வரை தொடருமென்றால்
மறுபடியும்...???



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயத்தின் தலைவாசல்
நிரந்தரமாய் மூடியதால்
சிறுபான்மை சிதைவுகள் நாம்
சாவோடு போராடும்
சந்ததியாய் ஆனோம்...
சர்வதேசமே சற்றுத் திரும்பிப் பார்
சடலங்கள் தோண்டும் ஒரு
சந்தர்ப்பம் வேண்டாம் உனக்கு...

## தடுப்புக் கைதிகள்

கம்பிக் கதவுகளுக்குப் பின்னால்
காட்சிப் பொருட்களாய்
சட்டம் நீதிக்கு பின்னால்
சாட்சிப் பொருட்களாய்
யுத்த முடிவுக்குப் பின்னால்
சான்றுப் பொருட்களாய்
செத்த மீதிக்குப் பின்னால்
சிதைவுப் பொருட்களாய்
உரிமை போருக்குப் பின்னால்
தடையப் பொருட்களாய்
தமிழர் வாழ்வுக்குப் பின்னால்
தடுப்புக் கைதிகளாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவதானம் மாந்தரே அவதானம்

இறைவனுக்கு இணையாக
மனிதர்களை வணங்கும்
மகத்தான பருவம் - இந்த
தேர்தல் காலம்

வாக்கு வரம் நாடி
வீதி வழி ஓடிவரும்
வேட்பாள பக்த கேடி
வேண்டியதைச் செய்வோமென
வெற்றுக் கோஷமிட்டு
வாக்கு வங்கி நிரப்பும்
அரசியல் மகுடிகள்
அவதானம் மாந்தரே அவதானம்

'எதனோலும்' 'குடுவும்'
எட்டப்பர் கூட்டமும் இனியும் வேண்டாம்
அடிவருடி அரசியலும்
அடிதடி கலாசாரமும் அறவே வேண்டாம்
கள்ளுச் சாராயமும்
கட்டப் பஞ்சாயத்தும் கிட்டவும் வேண்டாம்
ஓட்டுப் போடுவதில்
அவதானம் மாந்தரே அவதானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதங்கம்

காணாமல் போனவன்
வீட்டுக் கதவு
காத்துக் கிடக்கிறது
மீண்டு(மவன்) வருவானென்று
முற்றத்தில் மனைவி
முக்கிய ஆவணங்களுடன்

விடுவிக்கப்படாத விளை நிலங்கள்
எதிர்பார்த்திருக்கிறது
விவசாயி தம்மை மீண்டும்
நேசிக்க வருவானென்ற
வேதனைக் கனவுகளோடு
வேண்டாதவர்களை சுமந்து கொண்டு

அகதிக் கொட்டகைகளில் அல்லல்ப்படும்
அம்மாக்களின் ஆதங்கம்
பண்பாட்டுடன் பெண் பிரசுகளை
பக்குவமாய் வளர்ப்பதெப்படி ?
அதற்குள் சொந்த நிலம்
சேர்ந்திடுமா கைகளில்!

* ஞானம் சஞ்சிகை - 15-07-2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வுரிமை கேட்டு

பிறப்பதற்கு முன்னிருந்த
'பயங்கரவாத தடைச் சட்டத்தில்'
பலியிடப்பட்ட நான்
பூட்டிய சிறையிலிருந்து
பட்டினிப் போர் புரிகின்றேன்
பாச உறவுகளுடன் நேசமாய் வாழ !

எனக்கு இணையாக
என்னைப் பெற்றவளும் புறப்பட்டு விட்டாள்
பாதையோரம் பதாகைகளுடன்...
பாச மகளும் தாயுடன்
தானுமொரு பங்காளியாக

நால்வருக்கும் கோரிக்கை ஒன்றே
'நல்லாட்சி அரசே நம்மை
நிம்மதியாய் வாழ விடு - அன்றில்
நிரந்தரமாய் சாகவிடு'

* 2ம் கட்ட உணவு தவிர்ப்பு போராட்டத்தின் போது 08-11-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் ஏக்கம்

சின்ன மகாராணியே
செல்ல மகள் தான் நீயே - உன்
சிரிப்பும் சிலுசிலுப்பும்
சிணுங்கும் முக அழகும் - தினம்
காண ஏங்குகிறேன்
சிறை கைதி உன் அப்பா

படிப்பிலும் விளையாட்டிலும்
பல பதக்கம் பெற்றாயாம்
பாடலிலும் ஆடலிலும்
பத்திரங்கள் கொடுத்தார்களாம்
பத்திரிகைப் புகைப்படத்தில்
பார்த்துப் பூரித்தேன்

தங்கத் தாரகையே
'தமிழில்' நீ
வித்தகியாம்
'கணிதத்தில்' கடும்புலியாம்
'ஆங்கிலத்தில்' அவ்வப்போது
அசத்தியும் வருகிறாயாம்
அப்பாவுக்கு... ஆனந்தமடி ஆனந்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுகள் ஒன்பது ஆனாலும்
அன்பு மகளே
அப்பா நானும் விரைவில் வந்து
அள்ளியணைத்து
ஆசை முத்தம் பொழிந்திடுவேன்
அது வரை காத்திரடி - என்
அறிவுக் கண்மணியே !

* 2016.11.05



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரும்பான்மைத் தோழா

எனது நிலம் எரிந்துகொண்டிருந்தது
எனது சொந்தங்கள் செத்துக்கொண்டிருந்தனர்
எனது கனவுகள் குலைந்து போனது ....
ஊரெல்லாம் ஒப்பாரி ஓலம்
உடலங்கள் சிதறிய கோலம்
உறவுகளை எண்ணி கலங்கிய காலம் ....
பல நாட்கள் பட்டினியில் வாடினோம்
சில நாட்கள் பகல் மட்டும் உண்டோம்
மழை நாட்களில் சகதியில் தவித்தோம் ....
குண்டுபட்டு குடலறுந்து கிடந்தார்கள்
குற்றுயிராய் நீர் கேட்டு கத்தினார்கள்
குரல் வரண்டு பிணங்களாய் மடிந்தார்கள்...
முதுகில் குண்டு பட்டு இறந்த தாயின்
முலையில் வடிவது குருதி என்றறியாது
முட்டி முட்டி பால் எனப் பருகியது பாலகன்...
பெற்ற தாயை உற்ற உறவுகளைக் கூட
பார்த்துப் புதைக்க முடியாமல்
பாதையோரம் தள்ளிவிட்டுத் தப்பினர்...
கோரப் பசியோடு வீசப்பட்ட
கொத்துக் குண்டுகள் கிளையாக வீழ்ந்து
கொலைக் களமானது எந்தன் நிலம்...
பதுங்கு குழியே பாதுகாப்பென
பதுங்கியிருந்த பல்லாயிரம் குடும்பங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதையுண்டு போனர் அதற்குள்ளே...
இரத்த வெள்ளத்தில் எம் இனம்
இறந்து மிதக்கையிலும்
இனவாதம் கதைக்கிறீர் தென்னிலங்கையில்...
புத்தபிரானின் புனிதங்கள்
பௌத்தத்தின் தர்மங்கள்
புதைந்து போனதா முள்ளிவாய்க்காலில்...
கதறி அழுது கருணைக்கரம் நீட்டி
கருகும் எமக்காக குரலுயர்த்துங்கள் என
கெஞ்சி மன்றாடினோமே...
யாரும் முன்வரவில்லை எம்மைக் காப்பாற்ற
யாருக்கும் கேட்கவில்லை நம் குரல்
யாவரும் மௌனிகளாய் ஆனார்கள்...
எங்களின் உயிர்வலிக் கதறல்
எங்களின் செங்குருதி வாடை
எவருக்கும் புரியவே இல்லை...
நாம் செய்த குற்றம் தானென்ன?
நாம் செய்த கொடுமை தானென்ன?
நாம் செய்த தவறு தானென்ன?
பிறந்த மண்ணில் நிமிர்ந்து நின்றதா?
பரம்பரை நிலத்தில் படுத்துப் புரண்டதா?
பாட்டன் பூமியில் பண்புடன் வாழ்ந்ததா?
இல்லை....இல்லை....இல்லை
இல்லையெனில் எது குற்றமென்று
இலங்கை மாதாவே உரத்துச் சொல்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழனாய்ப் பிறந்தது குற்றமா?
தன்மானத்துடன் வாழ்வது குற்றமா?
தனித்துவ கலாசாரம் தான் குற்றமா?
எமது தாய் நிலத்திலிருந்து
எம்மைத் துரத்த வந்தவர்களை
எல்லைக்கு விரட்டியது தவறா?
எம்குலப் பெண்களிடம்
எல்லை மீறிய ஏதிலர்களை
எருக்கு செய்வது தவறா?
அடுத்தவர் உரிமை நிலத்தில்
அடியொன்றையேனும்
அபகரிக்க நாம் முனையவில்லையே...
உடன் பிறவா சிங்களச் சொந்தங்களே
உங்கள் நிலம் பறிக்க நாம்
உபாயம் வகுத்ததில்லையே....
எம்மவர் நிலம் பறிக்க
எல்லை தாண்டி வந்து ஏன் துடிக்கிறீர்கள்
எங்ஙனம் நியாயமிது?
மூன்று பத்து ஆண்டுகள் போர் தொடுத்தீர்கள்
மூன்று பத்து ஆண்டுகளும் வீழ்ந்தெழுந்தோம்
முப்பெரும் வல்லரசோடிணைந்து
முள்ளிவாய்க்காலில் முகவரியழித்தீர்கள்...
காலத்தால் அழியாத வலி சுமந்தும்
காந்தி வழி தொடர்கின்றோம்
எம் வாழ்வுரிமை காப்பதற்கு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவுமொரு இனவழிப்பே

செந்தமிழர் என்பதால்
சிறை வைக்கப்பட்டனர்
பல நூறு சொந்தங்கள்
சிறைக்கூட மேகியவர்
வதைகளுக்கு உட்பட்டு
வேதனையில் வெந்தனர்

வதைகளின் வகைகளை
வரையறுக்க முடியவில்லை வார்த்தைகளால்
விதியென்றெண்ணி வாடுகிறார்
விடுதலைச் சமையலாளிகள் - கை
விலங்குகளுடன்

இரண்டல்ல மூன்றல்ல
இருபது வருடங்களுக்கு மேல்
இலங்கைச் சிறைவாதத்திற்குள்
இரையாக்கப்பட்டுள்ளனர்
ஈழத் தமிழ் இளைஞர்கள்
இதுவுமொரு இனவழிப்பே !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பாவுக்காக...

அப்பா வருவாரெண்டு
ஆண்டுகள் ஒன்பது காத்திருக்கிறேன்...
அரசாங்கம் மாறியது
அதிகாரிகள் மாறினார்கள்
அப்பா இன்னும் வரவில்லை !

அரசியல் கைதியென்று
அப்பாவை சொல்கிறார்கள்...
அம்மாவிடம் கேட்டால் அவா சொல்லுறா
அந்த நேரம்
'அவையின்ர' கட்டுப்பாட்டில இருந்ததாலாம் !

அப்பா உண்ணா விரதம் இருக்கிறாராம்
அப்படியெண்டா நானும் உண்ணாவிரதமிருந்து
அப்பாவை விடுவிக்கப் போறன்...
அதிபரிட்ட சொல்லுங்கோ அம்மா
அடிக்க வேண்டாமெண்டு
அடம் பிடிக்கிறாள்
அன்பு மகளொருத்தி ....

* ஞானம் சஞ்சிகை - 06-2016



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைக்காக...

உண்ணா நோன்பு
உச்ச கட்டம்
இணக்க அரசியல்
போலிப் படம்
நாடாளு மன்றில்
சூடான வாதம்
நாலு நாளுக்குப் பின்
நகைச்சுவை சங்கமம்
அரசியலில் இதுவெல்லாம்
அப்பப்ப சகஜமப்பா !

பொங்கியெழுந்த மக்கள் பின்னால்
போய் நின்று பதாகை பிடித்து
'போராடுவோம்...
போராடுவோம்...
விடுதலை வரை போராடுவோம்...'
அடுத்த நாள் பத்திரிகைகளில்
ஐயாக்களின்
ஆக்ரோசமான படங்கள் !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அட்டை

ஆள்
அடையாளமொன்று
அவனுக்கு எதனையும் வகுத்ததில்லை
அவனிடமிருந்து எதையும் வாங்கியதுமில்லை

ஆள்
அடையாளமொன்று
அவனோடு உரையாடுவதில்லை
அவனது உரையாடலை கேட்பதுமில்லை

ஆள்
அடையாளமொன்று
அவனை அச்சுறுத்தியதில்லை
அவனுக்கு ஆலோசிப்பதில்லை

ஆளொருவர்
அங்குலமேனும் அடையாளமின்றி
அசைய முடிவதில்லை
'அவசரகால சட்டம்' அமுலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வஞ்சிக்காதீர்

சோர்வினைத் தாங்கிக் கொண்டு
சாவினை அடகு வைத்து
சிலநூறு சரித்திரங்கள்
சிறைகளுக்குள் சிதைகிறார்கள்

கலவரங்கள் செய்யவில்லை
காவலரைத் தாக்கவில்லை
கத்தியுமில்லை இரத்தமுமில்லை
கந்தக வாசங்களே இல்லை

வாழ்வதற்கு வழி கோரி
வீழ்வதற்குள் விடுதலை கோரி
வினயமாக வேண்டுகிறார்
வஞ்சிக்காது வழி சமைப்பீர்

* விடுதலை வேண்டி நடத்திய இரண்டாம் கட்ட உணவுத்
தவிர்ப்பின் போது 10-11-2015 தினகரன் 14-11-2015



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொழுது புலருமென்று...

விருப்பமின்றி அணிவிக்கப்பட்ட
வெள்ளை உடைகளுக்கு
விடைகொடுக்கும் நாள் - எம்
விடுதலை நாள்...
எதேச்சாதிகாரம் மிக்க
ஏமாற்று அரசுகளினால்
எம்முன் இப்போ
எதிர்பார்ப்புகள் பிறப்பதில்லை...
எப்போதோ ஒரு நாள்
எமக்காகவும் ஒரு பொழுது
நிச்சயம் புலருமென்று
பொறுமையோடு காத்திருக்கிறோம்...
இலங்கை அரசு எமக்களித்த
இரக்கமற்ற தண்டனையில்
தாயுடன் தாரமும் பிள்ளைளும் தான்
தவிக்கின்றனர் பாவம்...
ஒவ்வொருவருக்குள்ளும்
ஒராயிரம் துயரங்கள் - ஆனாலும்
ஒப்பாரி வைப்பதில்லை
உள்ளுக்குள் குமுறுகிறோம்...
எவருக்கு புரியுமிந்த
கைதிகளின் கதறல் மொழிகள்...
கை கட்டிப் பார்த்துச் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சித் தலைவர்கள்...
கம்பிக் கூட்டை எட்டிப் பார்க்கும்
மனித உரிமை வாதிகள்...
பத்திரிகை பக்கங்களில்
விடுதலையை வலியுறுத்தும்
பலமான அறிக்கைகள்...
பாராளுமன்றிலும்
சூடான வாதங்கள்...
பயங்கரவாதிகளுக்கு பொது மன்னிப்பா?
பொங்கி எழும் பல சேனாக்கள்...
இனவாதத்தின் ஆணிவேர்
இலங்கையை வளர்க்கிறது...
'இணைந்து வாழ முடியும்
இன்னபிற சமூகங்கள்...'
உறங்காத விழிகளுக்குள்
ஒவ்வொருநாளும் பல
ஒவ்வாத கனவுகள்...
கற்பனை வாழ்வில்
இளமைகள் கழிகிறது...
காகித வழியில்
உறவுகள் தொடர்கிறது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி மடல்

எங்கள் விடுதலைக்கான
அகிம்ஷைப் போரை அசட்டை செய்து
ஆயுதத்தோடு நிற்கிறார்கள்
அரசியல் கைதியெம் சிறையருகில்....

உண்ணாமலிருந்து உடலை வதைத்த பின்
ரசித்துப் பார்ப்பதற்காய் - சிலர்
உள்ளே வருகிறார்கள்....

உருக்குலைந்த எம்மைப் பார்த்து
ஒரிரு வார்த்தை பேசி
ஒரு தொகை வாக்குறுதிகள்...
அவர்கள் அனைவரும் அரசியல் வாதிகள்!

ஆயினும் ஆயுள் கைதி நான்
என் இ(ற)ருப்பை உறுதி செய்ய
எழுதும் இறுதி மடல்...

சிந்திக்க வேண்டிய
சிங்களத்துச் சகோதரனே - என்
இறுதி மடல் படிக்கும் இலங்கைத் தாய்மகனே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயலுமாயின்
அன்னை பிதாவுடன் - என்
ஆறாத்துயரில் பங்கெடுத்து ஆறுதல் கூறு...
அவர்கள் அழும் போது கண்ணீர் துடைக்கும்
'ஆறுதல் கரம்'
எனது மட்டுமே இருந்தது...

என் மக்களிடம் மட்டும்
எதையும் எடுத்துரைக்காதே
உன்னை விட அவர்கள்
அதிகம் அறிந்து வைத்துள்ளார்கள்
எம்மைப் பற்றி...

சிறைக்குளிருந்து நான் எழுதிய
எழுத்துக்களையாவது
சிறை வைக்காது விடுவித்து விடு - அவை
சிறகசைத்துப் பறந்து
சிலரையேனும் சிந்திக்கத் துண்டலாம்...

கம்பிக் கூண்டுக்குள்
எஞ்சிக் கிடக்கும் புத்தகங்கள்
என்னுடையதாயின்
அவைகளையும் அவர்களுடையதாக்கிவிடு
யுத்தத்தில் புத்தகங்களை இழந்த - சிந்தனை
முத்துக்கள் அவர்கள்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்கை வன்னியர்களிடம்
போய்ச் சொல்
'காந்தி'யை நினைப்பவர்கள்
'கோட்சே'யை மறப்பதில்லையென்று
அவர்கள் யாராக இருந்தாலும்...

உயிர் ஊசலாடும்
பாசக் கயிற்றின் ஓசை - மிக
அருகில் கேட்கிறது...
சகோதரனே எதிர்பார்த்திரு
நாளைய செய்தித் தலைப்பு
நம் துயர் சுமந்து வரலாம்...

நம்பிக்கையுடன்
நீள் துயில் கொள்கிறேன்
நாளை என் இறுதி ஊர்வலத்தில்
நாமறியாத பல அரசியல் பிரபலங்கள்
நடைபவனி வருவார்கள் என....

நன்றி

பெருமை

சிங்கள சகோதரர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெருமூச்சுக்களின் சுவாலைகள் ...



சிறைச்சுவர்களில் மோதி வெளியேறும் ஆயிரமா யிரம் இளைஞர்களின் பெருமூச்சுக்களின் தவிப்பும் நெருப்பும் தெறிக்கும் எழுத்துக்கள் விவேகானந்த னூர் சதீஸினுடையவை.

விடுதலை அவாவியதால், வினாடிகள் தோறும் சிறை வாழும் இவனுக்கு வயது இப்போது 39 தான்.

தாய், மனைவி, பிள்ளை என்ற குடும்பப் பொறுப்புகளை உடைய இவனது வாழ்க்கை, ஆயுள்கைதியாக தீர்ப்பு வழங் கப்பட்டு, சிறைச்சுவர்களுக்கு உள்ளேயே கழிகிறது.

தன்மான உணர்வும் தாயக விடுதலையின்பால் இவன் கொண்டிருந்த நியாயமான ஈடுபாடும் இவனை "பயங்கர வாதி" என்ற பெயரில் சிறை வைத்திருக்கிறது.

ஏக்கப் பெருமூச்சுக்களின் சுவாலைகள் சிறைச் சுவர்க ளைத்தாண்டி ஒரு நூல் வடிவில் சமூகத்திற்கு உணர்வுகளை காவி வருவது என்பது காலந்தோறும் கவனத்திற்குரியது. இது ஒரு வரலாற்றுப் பதிவுமாகிறது.

சிறைகளில் தமிழ் இளைஞ்ர்கள் படும் அவலத்தின் குறி காட்டியாக இதனை சிங்கள சகோதரர்களும் அறிந்துணர வேண்டும் என ஆவல் கொள்கிறான் படைப்பாளி

அன்னை மடியை, ஊர் நினைவுகளை, வாழ்க்கையின் எண் ணற்ற கனவுகளை, நீதியின் தேடல்களை, போர்க்கால நினை வுகளை, சிறைக்கம்பிகளிடையே தூக்கம் தொலைந்த இரவு களில் வரிகளாக வடித்திருக்கும் தம்பி சதீஸ் அவர்கள் தனது வரலாற்றையும் எழுத வேண்டும். நிச்சயம் அதுவொரு விடுதலை.

நன்றி

என்றும் அன்புடன்
**வெற்றிச்செல்வி**
14.07.2017

ISBN 978-955-38482-1-5
9 789553 848215

தேவி Printers, Jaffna
021 300 3030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org